உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

e-magazine

www.aanmeegamalar.com

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! மெயில் புக்

விருப்ப சந்தா செலுத்த

சிறப்பு மலர்



# அகிலம் போற்றும் அம்மன் ஆலயங்கள்

அம்மனின் அற்புதங்களை கூறும் சிறப்பிதழ்

# இயலாதவர்களுக்கு நீங்களும் உதவலாமே...

# மதுரையின் அட்சயப் பாத்திரம் டிரஸ்ட்

மதுரையில் ரோட்டோரத்தில், நகரின் மையப் பகுதிகளில் மனநலம் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் வீதியோரத்தில் உணவுக்காக தவித்துக் கொண்டிருக்கிறவர்களுக்கு உதவும் விதத்தில் "மதுரையின் அட்சயப் பாத்திரம் டிரஸ்ட்" என்ற அமைப்பை தொடங்கி கடந்த 1000 நாட்களுக்கு மேலாக தினந்தோறும் 300 பேருக்கு உணவு வழங்கி வருகிறோம். தங்களது திருமண நாள், பிறந்த நாள், குழந்தைகளின் பிறந்த நாள், மூதாதையர்களின் நினைவு நாள் போன்ற நாட்கள் மட்டுமின்றி பிற நாட்களிலும் இந்த புனிதப் பணியில் நாங்களும் கரம் கோர்த்தால் இத்திட்டம் வெற்றியடையும் என்பது உண்மை. சந்தோஷத்தில் பெரிய சந்தோஷம் அடுத்தவரை சந்தோஷப்படுத்திப் பார்ப்பது தான்.



**இயலாதவர்கள் மற்றும் மனநலம் பாதிக்கப்பட்டு ரோட்டோரத்தில் இருப்பவர்களுக்கு உணவு வழங்குவது மூதாதையர்களுக்கு திதி கொடுப்பதற்கு சமமானது**

## தானத்தில் சிறந்த தானம் அன்னதானம்

ஒரு நாளைக்கு ஒரு நபருக்கு ரூ.40 வீதம் 300 பேருக்கு ரூ. 12000 ஆகிறது

| | |
|---|---|
| 25 நாட்கள் - ரூ.1000 | 100 நாட்கள் - ரூ.4000 |
| 50 நாட்கள் - ரூ.2000 | 200 நாட்கள் - ரூ.8000 |


**Rtn. நெல்லை பாலு,**
நிறுவனர், மதுரையின் அட்சயப் பாத்திரம்,
G-102, சாந்தி சதன் குடியிருப்பு கோச்சடை, மதுரை-16
9442630815 (G-Pay)


**Account Details:**
MADURAIYIN ATCHAYA PAATHIRAM TRUST
Canara Bank - Madurai West Avani Moola Street
A/C No:110031396472
IFSC CODE : CNRB0001010 , MICR CODE : 625015006

**G-Pay & Phonepe No. 9442630815 பணம் அனுப்பலாம்**







# நெல்லிக்கனி மாலை அணிவித்தால் தீர்க்க ஆயுள் தரும் விநாயகர்

திருச்சி அருகிலுள்ள திருப்பைஞ்ஞீலி, பைஞ்ஞீலிநாதர் கோயிலில் உள்ள விநாயகருக்கு நெல்லிக்கனி விநாயகர் என்று பெயர். பக்தர்கள் தங்களுக்கு தீர்க்க ஆயுள் வேண்டி இத் தல விநாயகருக்கு நெல்லிக்கனி மாலை சாத்தி வழிபடுகின் றனர். இவ்வாறு நெல்லிக்கனியை மாலையாக அணிவித்தால் தீர்க்காயுள் கிடைக்கும் என்பது ஐதிகமாக உள்ளது.

●●●

## நினைத்ததை நிறைவேற்றும் மதுரை விபூதி விநாயகர்

விநாயகர் பல்வேறு வடிவங்களில் உல கெங்கிலும் காட்சியளித்தாலும் மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்தில் உள்ள விபூதி விநாயகருக்கு சிறப்புகள் அதிகம்.

மதுரை மீனாட்சியம்மன் கோயில் பொற் றாமரை குளக்கரையில் கன்னிமூலையான தென்மேற்கில் வீற்றிருக்கிறார் விபூதி விநாயகர்.

பக்தர்கள் தங்கள் கைகளாலேயே திருநீறு அபிஷேகம் செய்து இவரை வழி படுவது சிறப்பு. மகம், உத்திரம், விசாகம், கேட்டை, பூராடம் நட்சத்திர நாட்களில் இந்த விபூதி விநாயகருக்கு திருநீற்றால் அபிஷேகம் செய்தால், எண்ணிய எண்ணம் விரைவில் நிறைவேறும் என்பது ஐதீகம்.

மீனாட்சி அம்மனையும், சுந்தரேஸ்வரரை யும் வழிபட்டுச் செல்லும் பக்தர்கள், தாங்கள் கொண்டு வரும் விபூதியை இந்த விநாயகருக்கு, தங்கள் கரங்களாலேயே அபிஷேகம் செய்து வணங்குகிறார்கள்.

●●●

செவ்வாய் தோஷம் உள்ளவர்கள் பவழத்தால் செய்யப் பட்ட விநாயகர செவ்வாய்க்கிழமை தோறும் தவறாமல் வணங்க வேண்டும். பவழத்தால் விநாயகர் செய்ய வசதியில்லாதவர்கள் செம்மண் அல்லது குங்குமத்தில் விநாயகர் செய்தும் வழிபடலாம். பில்லி சூனியம் போன்ற கொடுமையான தீய சக்திகள் விலகுவதற்கு அரசும், வேம்பும் பின்னியபடி உள்ள மரத்தடியில் இருக்கும் விநாயகரை வழிபட வேண்டும்.

●●●

திருநெல்வேலியில் இருந்து ஐம்பது கிலோ மீட்டர் தொலைவில் காரையாரில் உள்ள அருவிக்கரை விநாயகருக்கு சித்தி விநாயகர் என்று பெயர். இடதுபுறம் கங்கையும், வலதுபுறம் பார்வதிதேவியும் உள்ளனர். இவ்விநாயகரை வணங்கினால் பிரம்மஹத்தி தோஷம் நீங்குமாம்.

●●●



சென்னை கோடம்பாக்கம், பாரதீஸ்வரர் காலனியில் உள்ள கற்பக விநாயர், நினைத்ததை நிறைவேற்றும் சக்தி படைத்தவராக விளங்கு கிறார், இந்த ஆலயத்தில், கிருஷ்ணர், மகா லட்சுமி, சாய்பாபா சன்னதிகள் உள்ளன. எளிமையான வேண்டுதலுக்கும் செவிசாய்க்கும் கற்பக விநாயகராக இங்குள்ள மக்கள் இவரை போற்றுகின்றனர். இதனால் நாளுக்கு நாள் பக்தர்கள் கூட்டம் இவரை நாடி செல்கின்றனர்.

●●●

திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி வட்டம் பழங்காமூரில் உள்ள வரசித்தி விநாயகர் ஆலயத்தில் நீண்டகாலமாக உள்ள புற்று ஒன்று விநாயகரின் வடிவ மாகவே மாறி உள்ளது. இந்த விநாயகர் பக்தர்களின் பாவங்களைப் போக்குகிறார்.

●●●

ஸ்ரீவில்லிப்புத்தூரை அடுத்த இடையன்குளம் கிராமத்தில் உள்ள பிள்ளையார் எதிரே உள்ள மூஞ்சூருக்கு வெந்நீர் அபிஷேகம் செய்தால் தோஷம் நீங்கிவிடும்.

●●●

மதுரை மீனாட்சி திருக்கோவில் வளா கத்தில் திறந்தவெளியில் வன்னிமரத்தடியில் விநாயகர் அமர்ந்து அருள்பாலிக்கிறார். இவரை சுற்றி வன்னி, வேம்பு, மந்தாரை, அத்தி, நெல்லி, அரசு, வில்வம், பவளமல்லி, நாவல் ஆகிய ஒன்பது தலவிருட்சங்கள் உள்ளன. அவற்றை ஒரே வேளையில் ஒன்றாக தரிசிப்பதால் நவக் கிரக தோஷம் நீங்கி வளமான வாழ்வு கிட்டும் என்பர்.

aanmeegamalar.com

# சித்திரை முதல் பங்குனி வரை பல்வேறு திருவிளையாடல்

## வருடம் முழுவதும் திருவிழாகாணும் மீனாட்சி ஆலயம்



சித்திரைதிருவிழா முதல் பங்குனி வசந்த உற்சவவிழா வரை மீனாட்சி சுந்தரேசுவரர் ஆலயத்தில் தமிழ் மாதம் தோறும் திருவிழாக்கள் நடைபெற்றுவருகிறது.

மீனாட்சி சுந்தரேசுவரர் கோவிலில் ஆண்டு முழுவதும் பல்வேறு விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. இறைவனின் 64 திருவிளையாடல்கள் வெவ்வேறு காலங்களில் இங்கு நடைபெறும், சித்திரை மாதம் முதல் பங்குனி வரை அனைத்து மாதமும் இங்கு விழாக் கோலம்தான்.

ஒவ்வொரு மாதமும் கொண்டாடப்படும் விழாவை பற்றி தெரிந்து கொள்வோம்.

தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் சித்ரா பவுர்ணமி விழா கொண்டாடப் பட்டாலும், மதுரையில்தான் சித்ரா பவுர்ணமி விழா சிறப்பாக கருதப்படுகிறது. ஒருமுறை விருத்ராசுவரன், விஸ்வரூபன் என்ற இருவரை தேவேந்திரன் கொன்றாள். அவர்கள் பிறப்பால் அந்தணர்கள் ஆனதால் இந்திரனை பிரம்மஹத்தி தோஷம் பிடித்து கொண்டது. அதிலிருந்து விடுபட தன் குருவை நாடி உபாயம் கேட்டான். குருபகவான் அவனிடம் பூலோகம் சென்று பல்வேறு சிவஸ்தலங்களில் வழிபட்டால் ஓரிடத்தில் உன்கெடுதல் நீங்கும் என்று கூறினார்.



அதன்படி இந்திரன் காசி முதலிய பல தலங்களில் வழிபட்டு தெற்கு நோக்கி வந்தான். ஓரிடத்தில் கடம்ப மரத்தின் கீழ் சென்றவுடன் தன்னை பற்றியிருந்த தோவும் விலக்கண்டான். இந்திரன் மகிழ்ச்சியடைய அவன் முன் கடம்ப மரத்தடியில் சிலபெருமான் திருஆலவாய் சோமகந்தார் அவனுக்கு காட்சி கொடுத்தார். இந்திரன் சிவபெருமானுக்கு கோவில் கட்ட நினைத்து தேவலோகத்தில் இருந்து ஒரு விமானம் வரவழைத்தான்.

இத்தலத்து இறைவனுக்கு இந்திரன் விமானம் அமைத்ததால் அதற்கு இந்திர விமானம் என்றும், விண்ணில் இருந்து வந்ததால் விண்ணிழி விமானம் என்றும் சொல்லப்படுகிறது.

இந்திரனிடம் ஒவ் வொரு வருடமும் சித்ரா பவுண்மி நாளில் என்னை இங்கு வந்து வழிபடுக என்று கட்டளையிட்டார். ஒவ்வொரு வருடமும் சித்ரா பவுர்ணமி நாளில் இந்திரன் இங்கு வந்து வழிபடுகிறான் என்று திருவிளையாடல் புராணம்கூறுகிறது.

அதனால் தான் சித்ராபவுர்ணமி மதுரையில் சிறப்பாக கருதப்படுகிறது.

வைகாசி வைகாசி மாதம் கோடை வசந்த திருவிழா, திருவாதிரை நட்சத்திரத்தில் இருந்து பத்து நாட்கள் எண்ணெய்க் காப்பு நடக்கிறது.

ஆனி மாதம் மகம் நட்சத்திரத்திருந்து

# பார்வையால் அருள்பாலிக்கும் மீனாட்சி

மதுரை மீனாட்சி அம்பாளின் விக்கிரகம், மரகதக் கல்பச்சைக் கல்லால் ஆனது. அம்பாள் மீனாட்சியின் கருவறையானது, 32 சிங்க உருவங்களும், 64 சிவகணங்களும், 8 கல்யானைகளும் தாங்கி நிற்கும் அபூர்வமானதாகும்.

இந்தக் கருவறை விமானத்தைத் தேவேந்திரன் அமைத்தான். மீன் போன்ற கண்களைப் பெற்றவர் என்பதால், மீனாட்சி என்று பெயர்பெற்றார். மீன், தன்னுடைய முட்டைகளைத் தனது பார்வையாலேயே தன்மயமாக்குவது போல, மீனாட்சி அம்மன், தனது பக்தர்களை, அருட்கண்ணால் நோக்கி அருள்பாலிக்கிறவள்.

மீனாட்சியம்மன் திருக்கோலத்தில், கிளியும் இடம்பெற்றுள்ளது. பக்தர்களின் கோரிக்கையை, அம்பிகைக்கு நினைவூட்ட, திரும்பத் திரும்ப, கிளி சொல்லிக் கொண்டிருப்பதாக நம்பிக்கையுள்ளது. இந்திரன் சாப விமோசனத்திற்காக, இத்தலத்தினைத் தேடி வந்தபோது, கிளிகளே, சிவவழிபாட்டிற்கு உதவி செய்தன.

இவருக்குப் பச்சைதேவி, மரகதவல்லி, தடாதகை, அபிசேகவல்லி, அபிராமவல்லி, கயற்கண்குமாரி, கற்பூர வல்லி, குமரித்துறையவள், கோமகள், சுந்தரவல்லி, பாண்டிப் பிராட்டி, மதுராபுரித் தலைவி, மாணிக்க வல்லி, மும்முலைத்திருவழுதி மகள் போன்ற எண்ணற்றப் பெயர்கள் உள்ளன.

ஊஞ்சல் உற்சவம். தினமும் மாலை ஆறு மணியில் இருந்து இரவு ஒன்பது மணி வரைக்கும் நூறு கால் மண்டபத்தில் ஒரே ஊஞ்சலில் சுந்த ரேசுவரர் மீனாட்சி அமர்ந்து ஊஞ்சலாட, கோயிலின் ஒதுவார்கள். மாணிக்க வாசகரின் பொன்னூஞ்சல் பாடங்களை பாட ஊஞ்சல் உற்சயம் நடைபெறுகிறது.

பத்து நாளைக்கு முளைக் கொட்டு உற்சவம் நடைபெறுகிறது. கொடியேற்றம் மீனாட்சிக்கு மட்டுமே நடைபெறும்.

ஆவணி மாதம் மூலத் திருநாள், ஆவணி மூல உற்சவம் என்றே பெயர் பெற்றது. நான்கு ஆவனி வீதிகளிலும் அம்பாளும், சுந்தரேசுவாரும் வீதி உலா வருவார்கள் திரு விளையாடல், பிட்டுக்கு மண்ட சுமந்த திரு விளையாடல், நரியை பரியாக்கியது. விறகு விற்றல் போன்ற திருவிளையாடல்கள் நடைபெறும். மூல நட்சத்திரத்தின்று கந்தரேசுவரருக்கு பட்டாபி சேகம் நடைபெறுகிறது.

புரட்டாசி மாதத்தில் நவராத்திரி கொலு விழா நடைபெறுகிறது. ஒவ்வொரு அலங்காரத்தில் மீனாட்சி அலங்காரத்தை காண ஏராளமான பக்தர்கள் வருவார்கள்.

ஐப்பசி மாத பிரதமையிலிருந்து அமாவாசை நாளிற்கு அடுத்த நாள் சஷ்டி, அமாவாசை நாளிலிருந்து ஆறாவது நாள் வரையிலும் கோலாட்ட உற்சவம். புது மண்டபத்திலே அம்மன் கொலுவிருந்து மதுரை இளம்பெண்கள் கூடியிருந்து கோலாட்டமாட உற்சவம் நடக்கிறது.

கார்த்திகை மாதம் பத்து நாட்கள் தீப உற்சவம். கார்த்திகை தீபதின்னத்தில் அம்மன் சன்னதியிலும் சுந்தரேசுவரர் சன்னதியிலும் சொக்கப்பனை கொளுத்தப் படுகிறது.

மார்கழி தனுர் மாத வழக்கப்படி காலையில் சீக்கிரமே நடை திறந்து இரவு ஒன்பது மணிக்கு நடுநிசி முடிந்து விடுகின்றது. தினமும் வெள்ளியம்பல நமாளர்சன்னதியிலிருந்து மாணிக்கவாசகர்முன்பாக கோவிலின் ஆஸ்தான ஓதுவார்கள் திருவெம்பாவை பாடல் களை பாடி போற்றுவார்கள். அதிகாலை 5.30மணியில் இருந்தே இது நடக்கும். இதில் பத்து 'நாட்கள்' எண்ணொய்' காப்பு நடக்கும். இந்த பத்து நாட்களும் சுவாமியும், அம்பாளும் புறப்பாடு கிடையாது. மாணிக்கவாசகர் மட்டுமே புறப்பாடு நிகழ்வு நடைபெறும். பதினோராம் நாள் ரிஷபவாகனத்தில் அம்மன் சுவாமி ஆடி வீதியில் வலம் வருகிறார்.

தை தை மாதம் தெப்பத் திருநாள் நடக்கும். வண்டியூரில் திருமலை நாயக்கரால் தோண்டப்பட்ட தெப்பக்குளத்தில் வசந்த மண்டபத்தில் தெப்பம்' கட்டி சுவாமியையும், அம்பாளையும் அதில் எழுந்தருளச் செய்து தெப்பவிழா நடைபெறும்.

மாசி மக உற்சவம் பங்குனி வசந்த உற்சவம் மண்டல உற்சவம் நடைபெறும். இதுதவிர பங்குனி உத்திரம், சாரதா நவராத்திரி இரண்டும் சேர்ந்து வரும் திருவிழா. பங்குனி மாதத் கார்த்திகை நட்சத்திரத்திலிருந்து உத்திரம் நட்சத்திரம் வரை அம்மனும் சுவாமி யும் வெள்ளியம்பலத்திலேயே அமர்ந்து பக்தர்களுக்கு காட்சி கொடுப்பார்கள். சுவாதி நட்சத்திரத்தன்று இருவரும் மகனின் திருமணக்கோலம் காண திருப்பரங்குன்றம் முருகன் கோவிலுக்கு எடுத்து செல்லப்படுகிறார்கள். மேலும் அகிலம்போற்றும் அன்னை மீனாட்சி அம்மன் ஆலயத்தில் தினசரி பூஜைகள் செய்யப்படுவதுடன் சிவபெருமானுக்கு உகந்த நாட்களாக கருதப்படும் அனைத்து நாட்களிலும் சிறப்பு பூஜைகள் செய்யப்படுகின்றன.

We are Responsible. Visit us for Safe Food.
akkarai Responsible Snacking
akkarai Responsible Snacking
akkarai express
LET'S THINNAI Relax & Recharge
THINNAI BUNLY BUNK Steamed Bun with Filling
The ICECREAM VAN Homely IceCream Estd. 2018
ONDRAHA Wholesome Selling
CHOCOLICA Cafe Hit Pause! Get together!
Check out for locations & timings: www.indianfoods.in | Contact: Ms Rani | 9791900447 | div3_ifpl@yahoo.co.in
INDIANFOODS INNOVATIONS Simple & Soulful
MD COMMUNITY KITCHEN Simple & Soulful

aanmeegamalar.com

# மாரியம்மன் வடிவங்களில் ஆதி பீடம்
# சமயபுரம் மாரியம்மன்

ஒட்டுமொத்த உலகத்தில் உள்ள அத்தனை மாரியம்மன் கோயில்களுக்கும் தலைமை பீடமானதுதான் சமயபுரம் ஆகும். சக்தி தலங்களில் மிகவும் பிரசித்தி பெற்றது இந்த தலம். தன்னை தரிசிக்க வரும் பக்தர்களுக்கு நோய்கள், தீவினைகள் அணுகாது, சகல சவுபாக்கியங்களும் கிடைக்க ஆண்டுதோறும் மாசி மாத கடைசி ஞாயிறு முதல், பங்குனி மாதகடைசி ஞாயிறு வரை பக்தர்களுக்காக சமயபுரம் மாரி அம்மனே 28 நாட்கள் பச்சை பட்டினி விரதம் இருக்கிறார்.

அம்மனின் இந்த விரதம் சமயபுரம் கோவிலின் தனிச்சிறப்பாகவே கொண்டாடப்படுகிறது.

இந்த 28 நாட்களில் அம்மனுக்கு தளிகை, நைவேத்தியம் கிடையாது. துள்ளு மாவும், நீர்மோர், கரும்பு, பானகம் மற்றும் இளநீர் மட்டுமே நைவேத்தியமாக படைக்கப்படுகிறது.

ஸ்ரீரங்கநாதரின் தங்கை சமயபுரம் மாரியம்மன். அண்ணன் ஸ்ரீரங்க நாதரைப் போன்றே சுதையினால் ஆன சுயம்பு வடிவமாக பக்தர்களுக்கு காட்சி அளிக்கிறாள்.

தட்சன் யாகத்துக்குச்சென்ற தாட்சாயணியை தூக்கி சிவபெருமான் ருத்ரதாண்டவம் ஆடியபோது அம்மனின் திருக்கண் இப்பகுதியில் விழுந்ததால் இந்த திருத்தலத்திற்கு கண்ணனூர் என்ற பெயர் புராணகாலம் தொட்டே இருந்து வருகிறது.



மிகத்தொன்மையான உற்சவ அம்மனின் திருமேனியில்இன்றும் ஆயிரம் கண்கள் உள்ளன.

இக்கோவிலில் எழுந்தருளியுள்ள மகாமாரியம்மன் மிகப்பெரிய சுயம்பு திருவுருவமாக, விக்கிரசிம்மாசனத்தில் ஆயிரம் கோடி சூரியபிரகாசத்துடன் தங்கதிருமுடி யுடன் குங்குமநிற மேனியில், நெற்றியில் வைரபட்டை ஒளி வீச, வைரகம்மல்களும், வைர மூக்குத்தியும், சூரிய, சந்திரனைபோல் ஜொலித்து, கண்களில் அருளொளிபாவித்து, அன்னைக்கு அன்னையாய், ஆதிமுதல் ஆதாரசக்தியாய் அருள்பாலிக்கிறாள்.

அம்மனின் சுயம்பு திருமேனியில் நவக்கிரக ஆதிக்கத்தை உள்ளடக்கி நவக்கிரகங்களை நவசர்ப்பங்களாக தரித்து அருள்பாலிப்பதால் அம்மனை தரிசனம் செய்வதன் மூலம் நவக்கிரக தோஷம் நீங்கும் என்பது ஐதீகம்.

இக்கோவிலில் இருக்கும் அம்மனை அமாவாசை, பவுர்ணமி மற்றும் கிரகண காலங்களில் வழிபட்டால் உச்ச பலன் கிடைக்கும். இத்தலத்தில் வழிபட்டால் ராகு, கேது தோஷம் நிவர்த்தியாகும் என்பதற்கு இக்கோவிலின் மேற்கூரையில் சிற்ப சான்றும் உள்ளது.

27 நட்சத்திரங்களின் ஆதிக்கங்களையும் தன்னுள் அடக்கி 27 எந்திரங்களாக திருமேனி பிரதிஷ்டையில் மகா மாரியம்மன் அருள்பாலிப்பது தனிப்பெரும் சிறப்பு அம்சமாகும். மேஷம் முதல் மீனம் வரையிலான 12 ராசிகளின் அதிபதியாக அம்மன் ஆட்சி புரிகிறார் என்பதற்கும் சிற்பச் சான்றுகள் உள்ளன.

இக்கோவிலில் அம்மன் அஷ்ட புஜங்களுடன் வீற்றிருப்பது வேறு எந்த மாரியம்மன் கோவிலிலும் காணக்கிடைக்காத அரிய காட்சியாகும். மேலும் மாரியம்மன் வடிவங்களில் ஆதி பீடம் சமயபுரம் ஆகும். எனவே தான் இக்கோவிலில் எழுந்தருளியுள்ள மகாமாரி பதம் மாறி சிவ பதத்தில் மிகப்பெரிய சுதை சுயம்பு திருவுருவமாக காட்சி அளிக்கிறாள்.

தேவர்களை இம்சித்த மகிஷாசூரனை புரட்டாசி மாதம் ஒன்பது நாட்கள் தவமிருந்து வதம் செய்தார் அன்னை ஆதிபராசக்தி. மகிஷாசூரனை வதம் செய்த பாவம் தீரவும், தன் கோபம் தணியவும் சோழ வளநாட்டின் தலைநகர் திருச்சிக்கு நேர் வடக்கே காவிரி வடகரையில் வேம்பு காட்டில் கவுமாரி என்று பெயர் பூண்டு சிவப்பு நிறம் கொண்டு மஞ்சள் ஆடை தரித்து, உடல் முழுவதும் வாசனை புஷ்பங்களால் மலை போல் குவித்து உண்ணா நோன்பிருந்து பல ஆண்டு காலம் தவம் செய்து அதன் பயனாக சாந்த சொரூபிணியாக சர்வரட்சகியாகி மாரியம் மன் என்ற பெயரில் அருள்பாலிக்கிறார்.

இந்த புராண வரலாற்றின் அடிப்படையில் தான் சமயபுரம் மாரியம்மன் கோவிலில் ஆண்டுதோறும் மாசி மாதம் கடைசி ஞாயிற்றுக்கிழமை முதல் பங்குனி மாதம் கடைசி ஞாயிறு வரை அம்பாள் பச்சை பட்டினி விரதம் இருந்து உலக ஜீவன்களை ரட்சித்து வருகிறார்.

பச்சை பட்டினி விரதத்தை அம்மன் அனுசரிக்கும் அன்றைய தினம் அதிகாலை விக்னேஷ்வர பூஜை, புண்யாக வாசனம், அனுக்ஞை, வாஸ்துசாந்தி, அங்குரார்ப்பணம் முடிந்து காலை 6.30 மணிக்கு மேல் 8 மணிக்குள் மீனலக்கனத்தில் அம்மனுக்கு காப்பு கட்டுதலுடன் பூச்சொரிதல் விழா ஒவ்வொரு ஆண்டும் நடைபெறும். இதில் பல ஆயிரம் பக்தர்கள் கலந்து கொள்வது வழக்கம்.

aanmeegamalar.com






தாயமங்கலம் முத்துமாரியம்மன் கோவிலுக்கு
வருகை தரும் பக்தர்களே வருக! வருக!!



# ஸ்ரீ பேச்சி அம்மன்

## டிரான்ஸ் போர்ட் & டிரேடர்ஸ்
## சேம்பர் பிரிக்ஸ் & ரியல் எஸ்டேட்

எங்களிடம் உயர்தரமான
அளவில் பெரிய சேம்பர்
செங்கல் கிடைக்கும்
பொறியாளர்கள் பில்டிங்
ஒப்பந்ததாரர்கள் அணுகவும்







உரிமையாளர் **எம்.கந்தசாமி**
கிடாக்குழி (இருப்பு மதுரை)
செல் 9843789337 9487059737

அலுவலக முகவரி

பிளாட் 1&2 செல்வபுரம் மெயின்ரோடு, குகன் பள்ளி
அருகில், தெப்பக்குளம், மதுரை-626009

சேம்பர் முகவரி

கிருங்கா கோட்டை முத்தனேந்தல் அருகில்
மதுரை-ராமேஸ்வரம் பை-பாஸ் ரோடு மானாமதுரை

# பாவங்களை போக்கி நல்வழி காட்டும் ஸ்ரீ மஹா பஞ்சமுக ப்ரத்யங்கிரா தேவி கோவில்



சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே வேதியே ரேந்தல் விலக்கில் உள்ள பஞ்ச பூதேஸ்வரத்தில் பாவங்களை போக்கும் ஸ்ரீமகாபஞ்சமுக ப்ரத்யங்கிரா தேவிகோவில் உள்ளது.

ஆண்டு முழுவதும் உலக மக்கள் அனைவரும் ஆனந்த மாய் வாழ வேண்டி சண்டியாகம் நடத்தபடுகிறது. அதே போல் இங்கு 24 மணிநேரமும் பக்தர்களுக்கு சுவைமிகு அன்னதானம் நடைபெறுகிறது. மதுரை மீனாட்சி அம்மனின் மறு அவதாரமாக பார்க்கப்படும் ஸ்ரீமகாபஞ்சமுக ப்ரத்யங் கிரா தேவிக்கு அமாவாசை யாகம் பிரதி மாதம் தோறும் நடைபெறுகிறது.

உலக மக்கள் துன்பத்திலிருந்து விடுபட்டு வாழ்கையில் அனைத்து செல்வங்களை பெற்று பேரானந்தத்துடன் வாழ வேண்டி நடைபெறுகிறது.

அமாவாசையன்று பூமிக்கும், சூரியனுக்கும் இடையில் எவ்வித தடையுமின்றி நேரடித் தொடர்பு உண்டு என்பதால் அன்றைய தினம் இந்த யாகத்தை தஞ்சை குருஜி கணபதிசுப்ரமணிய சாஸ்திரிகள் மற்றும் அவர்கள் சீடர் களால் ஸ்ரீ மஹா பஞ்சமுக ப்ரத்யங்கிரா தேவிக்கு யாகம் நடத்துகின்றார்கள்.

செய்யப்படுகின்ற இடமோ பல யுகமாக தெய்வீக புனிதர் கள் யாகம் செய்த இடம். புனித நீர் கலசங்களை வைத்து நடத்தபடுகிற ப்ரத்யங்கிர யாகத்தின்போது யாககுன்டத்தில் மனித தோல் அமைப்புடன், ஏழு அடுக்கு தோல் போன்ற விசித்தரா அமைப்பு கொண்ட பள்ளங்கல். கட்டங்கள் கொண்ட மிளகு பெருமளவில் ஆகுதி செய்யப்படுகிறது.

விலை உயர்ந்த பட்டுப்புடைவைகள்,தங்கம் வெள்ளி ஆபாரணங்கள், மூலிகை பொருட்கள், மிளகு, திரவிய பொருட்கள், பூமாலைகள் பழவகைகள் இடப்படுகிறது.



அதை தொடர்ந்து வனதுர்கை யாகம் நடைப்பெறுகிறது பின்னர் பூர்ணாஹுதி மற்றும் தீபாரதனை நடைபெறுகிறது தொடர்ந்து யாகசாலையிலிருந்து புனிதநீர் கலசத்தை மேலதாளத்துடன் எடுத்துச் செல்லபட்டு ஸ்ரீ மஹா பஞ் சமுக ப்ரத்யங்கிரா தேவிக்கு புனித நீர் ஊற்றி அபிஷேகம் நடைபெறும். அன்று அம்பாளுக்கு தங்க கவசம் அலங்காரம் செய்யப்பட்டு இருக்கும் தீபாரதனைநடை பெறும்.

இங்கு கணபதி. லக்ஷிமி கணபதியாக வும், தம்பதி சமேதராக இருந்து அருள் பாலிக்கிறார் மற்றும் பைரவர் இங்கு ஸ்ரீசொர்ணாகர்ஷண பைரவர்ராக இருந்து அருள் பாலிக்கிறார். அமாவசை மற்றும்

aanmeegamalar.com

பௌர்ணமி நாட்களில் தங்ககவசம் அலங்காரம் செய்யப்பட்டு இருக்கும்.

யாக புகை நம்மீது படுவதாலும், ஜுவாலையை நாம் பார்ப்பதாலும் தெய்வீக உருமாற்றம், சாந்த நிலையிலேயே நடந்துவிடுகிறது அமாவசை யாகத் தின் மூலமாக தனி மனிதன் பிரச்சனைகள், புரியாத வியாதிகள் மற்றும் நமது பாவங்கள் விலகுவதோடு நல்வழிக்கான தீர்வு கிடைக் கிறது.





ஏவல், பில்லி, சூனியம் போன்ற தீய சக்திகள் செயலற்றுப் போகிறது என்பது பல ஆண்டுகால அனுபவ உண்மை. இந்த மண்ணை மிதித்து புனித சேஷ் திரமகிமை இந்த அம்பாளை தரிசித்து அன்னதானம் சாப்பிட்டாலே சூர்யனை கண்ட பனிபோல் நம் குறைகள் பிணிகள் அனைத்தும் பறந்து விடுகின்றன அப்படிபட்ட புனித சேஷ்திரமாக உள்ளது. வரும் ஏப்ரல் 14 ந்தேதி சித்திரை தமிழ் வருட பிறப்பு அன்று ஞாயிறு காலைமுதல் மாலைவரை பக்தர்களுக்கு அம்மனின் பாதங்களில் வைத்து பூஜித்து கனி காசு வழங்கபடுகிறது.

அனைவரும் இதில் கலந்து கொண்டு ஸ்ரீ மஹா பஞ்சமுக ப்ரத்யங்கிர தேவி திருவருள்ஆசிர்வாதம் பெற்று ஆனந்தமாய் வாழ வேண்டும் என்று மானாமதுரை ஸ்ரீ மஹா பஞ்சமுக ப்ரத்யங்கிரா தேவியின் ஸாக்த மடாலயத்தின் சுவாமிஜி மாதாஜி அன்புடன் அழைகின்றார்கள்.

மேலும் ஆலய தகவல் தெரிந்திட ஸ்ரீ மஹா பஞ்முக ப்ரத்யங்கிரா தேவியின் ஸாக்த மடாலயம், பஞ்சபூதேஸ்வரம், வேதிய ரேந்தல் விலக்கு, மானாமதுரை. சிவகங்கை மாவட்டம் செல்: 98428 58236.


அன்புடன் உலக மக்கள் அனைவரும் ஆனந்தமாக வாழவேண்டும்

S.ஆனந்தகிருஷ்ணன்&கோ

மரம், ஓடு வியாபாரம் & சாமில்

SAK சீனியப்பா குரூப்ஸ் SAK





எங்களிடம் ஒரிஜனல் (மர்மா), ஆஸ்திரிரேலியா வேங்கை, பர்மா தேக்கு, கேரளா தேக்கு, வெளிநாட்டு மரங்கள், வேம்பு, மருதமரம், நாவல்மரம், நல்ல கலர் உள்ள நாட்டு வாகை மரங்கள், குமிழ்மரம், ரோடு வாகைமரம், பெரிய சுற்றளவு கலர் உள்ள மரங்கள் மற்றும் மர பர்னிச்சர்கள் விற்பனைக்கு தயாராக உள்ளது. மொத்த மர வியாபாரிகள் அணுகவும்.



S.ஆனந்தகிருஷ்ணன்
செல்: 98424 68256

SAK மானாமதுரையில் அதி நவீன வசதிகளுடன்

சீனியப்பா லாட்ஜ் A/C


SAK திருமண ஹால்



A.குணா (எ) குணசீலன்
செல்: 98428 68256

172, பைபாஸ் ரோடு, மானாமதுரை.

9842868256



# கனவில் தோன்றிய மஹா பெரியவா

# 'ஸ்ரீ மஹா பெரியவா க்ருஹம்'

## மதுரையில் உருவான அற்புதம்

காஞ்சியின் கருணைக்கடல் 'ஸ்ரீ காஞ்சி மகா பெரியவா' நிகழ்த்திய அற்புதங்கள் ஏராளம். அவரை ஆத்மார்த்த குருவாக ஏற்றுக் கொண்ட பக்தர்களின் வாழ்க்கையில் ஏற்பட்ட நெகிழ்ச்சியான பல நிகழ்ச்சிகளே அதற்குச் சான்று. காஞ்சியில் அருளும் ஸ்ரீ காமாட்சியின் அருளுக்குப் பாத்திரமான ஸ்ரீ காஞ்சி மஹா பெரியவா, மீனாட்சி அருளாட்சி செய்யும் மீனாட்சி பட்டணமான மதுரையில் குடி கொண்ட வரலாறும் நெகிழ்ச்சியாக இருக்கிறது.

மகா பெரியவாவின் தொண்டர்களில் ஒருவர் நெல்லை பாலு. காஞ்சிபுரத்தில் பத்திரிக்கையாளராக பணியாற்றி காஞ்சி மடத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டு சேவை செய்து வந்தவர். மகா பெரியவரின் காலத்திற்கு பிறகு, குடும்ப சூழல் காரணமாக மதுரைக்கு இடம் பெயர்ந்தார். மகா பெரியவாவின் தீவிர பக்தரான இவருக்கு அடிக்கடி காஞ்சிபுரம் சென்று தரிசிக்க இயலவில்லையே என்ற மனக்குறை மட்டும் தீரவில்லை. எனவே, மதுரையில் அனுஷத்தின் அனுகிரகம் என்ற அமைப்பை தொடங்கி மகா பெரியவரின் பிறந்த நட்சத்திரமான ஒவ்வொரு அனுஷம் நட்சத்திரத்தன்றும், மதுரையிலேயே பொது இடத்தில் அவரது படங்களை வைத்து பூஜிப்பதை வழக்கமாக செய்து வந்தார். பெரியவா குறித்த சொற்பொழிவுகளையும் ஏற்பாடு செய்து வந்தார். இவ்வாறு, பூஜைகளும், வழிபாடுகளும் தொடர்ந்தன. இதில் கலந்து கொண்ட பல பக்தர்களும் மதுரையில் பெரி யவருக்கு ஒரு வழிபாட்டுத்தலம் இருந்தால் நன்றாக இருக்கும் என்ற தங்களின் உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்தி வந்தனர். அதன் பின்னர் அரங்கேறிய சம்பவங்கள் தான் காஞ்சி பெரியவரின் அனுக்கிரகம்.

அது பற்றிப் பேசிய நெல்லை பாலு, "2012 ஆம் ஆண்டில், மகா பெரியவரின் வருடாந்திர ஜெயந்தி விழாவிற்கு சுமார் 2 வாரங்களுக்கு முன்பாக, கனவில் மகாபெரியவரின் விக்ரகம் ஒன்று தொடர்ச்சியாக வந்தது. அதற்கான காரணத்தைப் புரிந்துகொள்ள முடியாமல் காஞ்சி மடத்திற்கு சென்று விட்டேன். ஜெயேந்திரரிடம் கனவைப் பற்றியும் பகிர்ந்து கொண்டேன். நான் கூறியபடி ஒரு சிலையை பக்தர்கள் இதற்கு முன்பாக மடத்திற்கு கொடுத்துள்ளதாகவும் அப்போது அவர் தெரி வித்தார். பின்னர், மகாபெரியவரின் அதிஷ்டானத்தில் வழிபட்டு விட்டு அங்கிருந்து கிளம்பினேன்.

அப்போது, மடத்திற்கு வந்திருந்த சுமார் ஏழு வயது மதிக்கத்தக்க ஒரு சிறுவன் என்னருகே வந்து, 'சிலை விஷயமாத்தானே புது பெரியவாவிடம் பேசனீங்க!' எனக் கேட்க, ஒரு கணம் அதிர்ந்தே போய் விட்டடேன். நான் உள்ளே பேசியது வெளியில் இருந்த





சிறுவனுக்கு எப்படித் தெரியும்? என வியப்பு எனக்கு! அதற்குமேல் பேசாத அந்தச் சிறுவன், ஒரு தொலைபேசி எண்ணை மட்டும் கொடுத்துவிட்டு விறுவிறுவென அங்கிருந்து நடையைக் கட்டி விட்டான். அங்கு அந்தச் சிறுவனை தவிர வேறு யாரும் இல்லை. ஒருவேளை பெற்றோர்களுடன் வந்திருந்தாலும் கூட, அப்படி யாரும் அங்கு இருந்ததாகவும் தெரியவில்லை.

குழப்பத்தோடு, சிறுவன் கொடுத்த எண்ணை தொடர்பு கொள்ள, எதிர்முனையில் பேசியவர் கும்பகோணத்தில் இருந்த ஒரு சிற்பி. 'இது பெரியவாவின் அனுக்கிரகம்!' என்று அப்போதுதான் உணர்ந்து கொண்டேன். கனவில் கண்டபடி சிலை வடிக்க வேண்டும் என்று ஸ்தபதியிடம் கேட்க, அவ்வாறு சிலை வடிக்க தாமதம் ஆகும் என்று சொன்ன சிற்பி, ஏற்கனவே காஞ்சிப் பெரியவரின் ஒரு

aanmeegamalar.com aanmeegamalar.com aanmeegamalar.com aanmeegamalar.com aanmeegamalar.com







சிலை தயாராக இருப்பதாகச் சொல்லி, சிலையையும் மதுரைக்கு அனுப்பி விட்டார்" என்றார் வியப்பு குறையாமல்.

அதன்பின்னர், பக்தர்களின் பங்களிப்புடன் சிலையை பிரதிஷ்டை செய்து, 'ஸ்ரீ மஹா பெரியவா க்ருஹம்' என்னும் பெயரில் வழிபாட்டு மையம் தொடங்கப்பட்டுள்ளது. கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக மதுரையில் குடி கொண்டு, பக்தர்களுக்குத் தன் அருளாசியை வழங்கி வருகிறார் மகா பெரியவா. காஞ்சிப்பெரியவர் தனது கடைசி கால கட்டத்தில் இருந்த தோற்றத்தில் உள்ளது இங்குள்ள சிலை. உடல் மெலிந்து, நெஞ்சின் விலா எலும்புகள் புடைப்பாக தெரியும்படி தத்ரூபமாக இருக்கிறது. காஞ்சிபுரம் மடத்தில் ஒவ்வொரு அனுஷம் நட்சத்திரத்தன்றும், தங்கச் சப்பரத்தில் அவரது சிலை உலா வரும். கிட்டத்தட்ட அந்தச் சிலையை ஒத்த அளவிலேயே இங்குள்ள சிலையும் அமைந்திருப்பது சிறப்பு.

## ஆயிரம் நாட்களை கடந்த ஆதரவற்றோருக்கு உணவு வழங்கும் அட்சயபாத்திரம்


மதுரையில் மகாபெரியாவா ஆசியுடன் தினந்தோறும் உணவு வழங்கும் அட்சய பாத்திரம் மதுரை அனுஷத்தின் அனுகிரகம் ஸ்தாபகர் நெல்லை பாலு மதுரையில் கொரோனா காலத்தில் இருந்து ரோட்டோரம் உள்ள ஆதரவற்றோர் முதியோர் மற்றும் அரசுமருத்துவ மனையில் உள்ள நோயாளிகள் ஆகியோர்க்கு தினந்தோறும் மதிய உணவை நேரில் சென்று வழங்கிவருகிறார்.

மகா பெரியவா ஆசியுடன் மதுரையின் அட்சய பாத்திரம் என்ற டிரஸ்டை தொடங்கி தற்போது வரை 1100 நாட்களாக உணவு வழங்கும் பணியில் ஈடுபட்டு வருகிறார். இந்த சேவையை முன்னாள் அமைச்சர்கள் மாவட்ட ஆட்சியர், ஆன்மிக பெரியோர்கள் பாராட்டி வருகின்றனர்.

மதுரை மகா பெரியவா ஆலய தொடர்புக்கு 9442630815

எங்கே இருக்கிறது? மதுரை பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து சுமார் 3 கிலோமீட்டர் தொலைவில் உள்ள, எஸ்.எஸ்.காலனி எண் 13 பொன்மேனி நாராயணன் ரோட்டில் அமைந்துள்ளது. அரசரடி அல்லது காளவாசல் பஸ் ஸ்டாப்பில் இறங்கி, அங்கிருந்து ஆட்டோவில் செல்லலாம்.


திறப்பு நேரம் காலை 8 10 மணி, மாலை 5 இரவு 8 மணி, தொடர்புக்கு: 94426 30815

தரிசிக்க வாருங்கள்!
காஞ்சி
ஸ்ரீ மஹா பெரியவா
கோவில் (க்ருஹம்)
13, பொன்மேனி நாராயணன் ரோடு,
எஸ்.எஸ்.காலனி, மதுரை.

ஒவ்வொரு வியாழக்கிழமையும் குருவார தினத்தன்று சிறப்பு புஷ்பாஞ்சலி நடைபெறும். வியாழன் அன்று நடைபெறும் குருவார நிகழ்வில் பங்கேற்கும் அனைவருக்கும் ஸ்படிக மாலை பிரசாதமாக வழங்கப்படும். அனுஷ நட்சத்திர தினத்தன்று ஸ்ரீ மஹா பெரியவா விக்ரஹம் மற்றும் வெள்ளி பாதுகைக்கு சிறப்பு அபிஷேகம் நடைபெறும்.

அனுஷ வைபவத்திற்கு தங்களின் அருட்கொடையினை வழங்கிட அன்பு வேண்டுகோள்



ஸ்ரீ மஹா பெரியவா அருட்பணியில்...
Rtn.நெல்லை பாலு,
நிறுவனர், அனுஷத்தின் அனுகிரஹம்
செல் : 9442630815(G-Pay)

# சென்னையை வளமாக்கும்

# காளிகாம்பாள்

தமிழகத்தில் பல்வேறு சிறப்பு வாய்ந்த அம்மன் சன்னதிகள் இருந்தாலும், சென்னையில் உள்ள காளிகாம்பாளுக்கு தனிச் சிறப்புகள் உள்ளது.

காமாட்சி அம்மன், தனது இச்சா மந்திர சக்தியால் பன்னிரண்டு ஸ்தலங்களில்காட்சி தருகிறாள். அந்த பன்னிரண்டுதலங்களில் ஒன்றுதான் காளிகாம்பாள் கோயில்.

மேற்கு நோக்கி அர்த்த பத்மாசனத்தில் வலக்கால் தொங்கவிடப்பட்டநிலையில், அங்குச பாசம் மேற்கையில் ஏந்தி, தாமரை வரத முத்திரையுடன், மூக்குத்தி மின்ன, மரகத பதக்க பொன் தாலியும், ஒட்டி யாணம், கொப்பு, குழை, கங்கணம், பாதச்சிலம்பு மின்ன, காலை மூன்று அரக்கர்களின் மேல் வைத்த நிலையில் எழிற் கோலம் காட்டுகின்றாள். நாம் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களையும்நீக்கினாலே அந்த பரம் பொருளுடன் சேர முடியும் என்பதை குறிப்பாக காட்டுகின்றாள் அன்னை.



“ஸமாசர ரமாவாணி
ஸவ்ய தக்ஷிண சேவிதா”

**என்ற லலிதா சகஸ்ர நாமாவின் படி ஸ்ரீ மஹா லக்ஷ்மியும், ஸ்ரீ மஹா சரஸ்வதியும் தன் இரு கண்களாய் அமையப் பெற்றவள் காளிகாம்பாள், இந்த தாயாரால்தான் செல்வமும் கல்வியும் சென்னை நகரில் குவிந்திருப்பதாக கூறப்படுகிறது.**

சிவசக்தித்தலமான இத்தலத்தில் எம்பெருமான் கமடேஸ்வரராகவும், அருணாச்சலேஸ்வரராகவும் எழுந்தருளி அருள்பாலிக்கின்றார் மற்றும் உண்ணா முலை அம்மன் சன்னதியும் உள்ளது. எனவே இத்தலத்தில் வழிபட்டால் காஞ்சி, அருணை ஆகிய இரு தலங்களையும் வழிபட்ட பலன் உண்டு.

மேலும் கோவிலின் உள்ளேயே குரு சன்னதியும், பள்ளியறையும் உள்ளன. நெரிசல் மிகுந்த பாரிமுனைப் பகுதி என்பதால் ஒரே ஒரு பிரகாரம். பிரகாரத்தில் தென் கிழக்கு மூலையில் கிழக்கு நோக்கிய சித்தி புத்தி வினாயகர் சன்னதி. சுப்பிரமணியர் வட கதிர் காம முருகராகவும், அகோர வீர பத்திரர், மஹா காளி, வேத மாதா காயத்ரி, துர்கா, விஸ்வ கர்மாஆகியே'ருக்கு தனித்தனி சந்நிதிகள், வீரபத்திரர் சன்னதியின் விமானத்தில் ஆட்டுத்தலையுடன் கூடிய ஆணவம் நீங்கிய தட்சன் வீர பத்திரரை வணங்கும் சுதை சிற்பம் அற்புதமாக உள்ளது. வடக்கு நோக்கிய துர்க்கை அம்மன் செப்புத் திருமேனி, எழிலாக அருட்காட்சி தருகின்றாள் அன்னை.

வெளி பிரகாத்தில் வட கிழக்கு முலையில் ஆடல் வல்லான் சன்னிதி பிரம்மோற்சவ காலங்களில் அம்மனின் அலங்கார மண்டபமாகவும் விளங்குகின்றது. பரிவார தேவதை கடல் கண்ணி, கடல் தீர்த்தம் எனவே அன்னை நெய்தல் நில காமாட்சி என்றும் அழைக்கப்படுகின்றாள், தல விருட்சம் மா மரம்.

காளி என்றாலும் சாந்த ரூபத்தில் காமாஷியாக எழிற்கோலம் காட்டுகின்றாள் அன்னை. அவள் சன்னதியில் நின்றாலே ஒரு நிம்மதி அம்மையை தரிசித்தவுடன் நம் பாவமெல்லாம் விலகுகின்றன.

ஆதி சங்கர பகவத் பாதாள் ஸ்தாபித்த ஸ்ரீ சக்ர அர்த்த மேருவும் அம்மையின் முன் உள்ளது. அர்ச்சனை அர்த்த மேருவிற்க்குத்தான் நடைபெறுகின்றது.

காளிகாம்பாள் ஆலயம் 3000 ஆண்டு பழமையானது. மட்டுமின்றி வரலாற்று சிறப்புடையதாகவும் திகழ்கிறது.

ஸ்ரீசக்கரம் பிரதிஷ்டை செய்யப்பட்டிருப்பதால் அம்பாள் முன் வைக்கப்படும் அனைத்து வேண்டுதல்களும் குறைவின்றி வெற்றி பெறும்.

இத்திருத்தலம் பல்வேறு காலத்தில், பல்வேறு வகையில் புதுப்பிக்கப்பட்டு வந்துள்ளது. தற்போதுள்ள ஆலயம் 1639ம் ஆண்டு விஸ்வகர்மா குலத்தவரால் கட்டப்பட்டு, இன்றும் சீரும், சிறப்புமாக பராமரிக்கப்பட்டு வருகிறது.

வீர சிவாஜியும், மஹா கவி பாரதியாரும் வழிபட்ட தலம், விஸ்வ கர்மாவிற்கு தனி சன்னதி உள்ள தலம், ஆதி சங்கரர் ஸ்ரீ சக்ரம் ஸ்தாபித்த தலம் என்ற அனைத்து பெருமைகளையும் கொண்ட தலம்

காளிகாம்பாள் தலத்தில் குங்குமம் பிரசாதம் பெற்றாலே வாழ்வில் உயர்வும், மோட்சமும் கிடைக்கும் என்று கூறப்படுகிறது. காளிகாம்பாள் மகாலட்சுமியையும், சரஸ்வதியையும் தன் இரு கரங்களாக பெற்றிருப்பதாக புராணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

காளிகாம்பாள் ஆலயத்தின் பரிவார தேவதை கடல்



கன்னியாகும். கமடேஸ்வரி, கோட்டையம்மன், சென்னியம்மன், நெய்தல் நில காமாட்சி என்றும் ஆயிரம் திருநாமம் அம்பாளுக்கு இத்தலத்தில்.


மச்ச புராணம், வாமன புராணம், கூர்ம புராணம், லிங்க புராணம், பவிஷ்ய புராணம் முதலிய புராணங்களில் இத்திருக்கோவிலைப் பற்றிய குறிப்புக்கள் உள்ளன.

காளிகாம்பாள்ஆலயம்கிழக்கு நோக்கி உள்ளது. அம்பாள் மேற்கு நோக்கி வீற்றிருக்கிறாள்.

ஆதிபராசக்தி தன்னை பல சக்திகளாக தோற்றுவித்த சித்தாடல் செய்து வருகிறாள். அந்த அபூர்வ சக்திகளுள் ஒருவளே அன்னை காளிகாம்பாள்.

காளிகாம்பாளின் அவதாரம் நீலியாய், சூலியாய், காளியாய் உருவகப்படுத்தப்பட்டுள்ளது. காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம், தம்பட்டம், வீண் பெருமை, தன்நிலை உணராமை போன்றவற்றை காளிகாம்பாளை வழிபட, வழிபட நம் மனதில் இருந்து நீங்கச் செய்யலாம்.

காளிகாம்பாள் அருள்புரியும் இத்தலத்தில் இந்திரன், குபேரன், விராட் புருஷனான ஸ்ரீ விஸ்வகர்மா ஆகியோர் போற்றி துதித்துள்ளனர்.



காளிகாம்பாள் அவதரித்த இடத்தை நம் முன்னோர்கள் "சொர்ணபுரி" என்று பெயரிட்டு அழைத்து வந்தனர். நாகலோக கன்னிகளும், தேவலோக கன்னிகளும் அன்னை காளிகாம்பாளை வழிபட்டு பூர்வ ஜென்ம புண்ணியங்களை அடைந்தனர்.

காஞ்சி விஜயேந்திரசரஸ்வதி சுவாமிகள், பன்றிமலை சுவாமிகள், மயிலை ஞானிகள் சத்குரு ஸ்ரீ சதாசிவபிரும்மேந்திரர், காயத்ரி சுவாமிகள், தவத்திரு ராமதாசர் உள்பட பல மகான்கள், ஆன்மீகப் பெரியோர்கள் காளிகாம்பாளை வழிபட்டு பேறு பெற்றுள்ளனர்.

இத்தலத்தில் வெள்ளிக்கிழமை தோறும் கன்னி பூஜை, கோ பூஜை, திருவிளக்கு பூஜை நடத்தப்படுகிறது.

இத்தலத்தில் நடைபெறும் சுவாசினி பூஜை சிறப்பு மிக்கது. இந்த பூஜை சுமங்கலிகளுக்கு விசேஷ அருள் தருவதாகும்

இத்தலத்தில் அமாவாசை தோறும் ஸ்ரீகாயத்ரி தேவிக்கும், விஸ்வ பிரம்மத்துக்கும் விஸ்வ கர்ம சிறப்பு வழிபாடுகள் நடத்தப்படுகிறது.

திருமணமாகி குழந்தை இல்லாதவர்கள் ஸ்ரீ காளிகாம்பாள் கருவறையில் உள்ள மூலவருக்கு மஞ்சளால் அபிஷேகம் செய்து, அந்த மஞ்சளை பயன்படுத்தி வந்தால் விரைவில் பலன் கிடைக்கும். செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் ராகு காலத்தில் எலுமிச்சை பழம் தீபம் ஏற்றி வழிபடுவது கூடுதல் நன்மை தரும்.

இத்தலத்தில் மேற்கு நோக்கிய நிலையில் உள்ள ஸ்ரீஆஞ்சநேயரை வழிபட்டால் நினைத்த காரியம் கைகூடும்.

இத்தலத்தில் தம்புச் செட்டித் தெருவில் உள்ள கிழக்கு கோபுர வாசல், "குண வாயில்" என்றும், அரண்மனைக்காரன் தெருவில் உள்ள மேற்கு கோபுர வாசல் "குட வாயில்" என்றும் அழைக்கப்படுகிறது.

காளிகாம்பாள் தலத்தில் உள்ள ஒவ்வொரு சன்னதியும், பகுதியும் வாஸ்து முறைப்படி அமைக்கப்பட்டுள்ளது.

இத்தலத்தில் பூந்தேர், கிண்ணித்தேர், வெள்ளித் தேர் என்று மூன்று வகையான தேர்கள் உள்ளன. இத்தலத்தில் மொத்தம் 33 பஞ்சலோக சிலைகள் உள்ளன. தொல்பொருள் ஆய்வுத் துறையினர் இதை பதிவு செய்துள்ளனர்.

மற்ற மாதங்களை விட கார்த்திகை மாதம் இத்தலத்தில் கோலாகல பூஜைகள் நடத்தப்படும். அதுவும் காளி பிறந்த தினமான கார்த்திகை அமாவாசை தினத்தன்று காளி ஜெயந்தி விழா மிக சிறப்பாக நடைபெறும். இத்தலம் தோன்றி சுமார் 3 ஆயிரம் ஆண்டுகள் இருக்கலாம் என்று நிபுணர்கள் கணக்கிட்டுள்ளனர்.


SREE JANAKI TOURS
DIVINE TOURS & SPECIAL TOURS ORGANISERS
SPECIAL CARE FOR SENIOR CITIZEN
SPECIAL COMFORT TOURS (TRAIN / BUS)
● KOLLUR, UDUPI TOUR ● KERALA TEMPLE TOUR
● SHIRIDI, MANTRALAYAM ● NAVAGRAHA TOUR
● KASI, GAYA, ALLAHABAD & PURI ● AHOBILAM & HILL STATION
ONE DAY TOUR (INCLUDING FOOD & A/C VAN)
● THIRUVANNAMALAI GIRIVALAM ● SRIPURAM GOLDEN TEMPLE
● SURUTAPALLI PRADASHOM ● SAKTHI TOUR
● THENNANGUR ● KANCHIPURAM & BALAJI DARSHAN
NEW 24, REDDY STREET, VIRUGAMBAKKAM, CHENNAI 600092
(OPP JAINS KENCES RETREAT)
PHONE: 044 24994450
90942 79625
90942 79626
e-mail: srijanaki.tours@gmail.com

# மீனாட்சி அம்மன் பிறவிக்கு காரணமான
# வேம்பத்தூர் கைலாசநாதர் கோவில்





மதுரை பட்டணத்தில் மணிபுரகத்தை தலை நகராக கொண்டு பாண்டிய நாட்டை ஆண்டு நல்லாட்சி புரிந்து மக்களை காத்து வந்த மலையத்துவஜ பாண்டிய மன்னர்க்கு குழந்தை பாக்கியம் வேண்டி சிவன் மீது தீவிர பக்தி கொண்டு சிவனடியார்களுக்கு தொண்டு செய்து வந்தார்.

மன்னரின் தொண்டில் மகிழ்ச்சி அடைந்த சிவனடியார்கள் புத்திரகாமேஷ்டி யாகம் நடத்தி அதன் பலனாக அன்னை பராசக்தியே உங்களுக்கு அவதரிப்பாள். என்று ஆசிவழங்கினார்கள். யாக ஏற்பாடுகளை செய்துவிட்டு யாகம் நடைபெறும் முன் கைலாயம் சென்று சிவனை தரிசிக்க மன்னரும் அவர் மனைவியுடன் யாத்திரையாக புறபட்டு சென்றனர்.

கால சூழ்நிலையால் இயற்கை சீற்றங்களால் யாத்திரையை தொடர முடியாமல் சிவனை மனதில் நினைத்து மனம் உருகி வேண்டினார்கள்.

அப்போது நூறு வயதை கடந்த முதியவர் தள்ளாடியபடி, "மனமே கைலாயம் சிவலிங்கத்தை ஏந்தி கொண்டு எங்கு நிற்கிறாயோ அதுவே கைலாயம்" என கூறியபடியே சென்றார்.

யாத்திரை செல்லும் வழியில், யாத்திரை நிறைவுபெறமால் விடுமோ என வருந்திய போது, "மனமே கைலாயம்" என, முனிவரின் வாக்கை கேட்டு மனமகிழ்ந்து, மன்னரும் அவரது மனைவியும், சிவலிங்கத்தை கையில் ஏந்தியபடி வேம்பற்றூர் என்னும் ஊரை அடைந்தனர்.

அங்கு ஈசான மூலை வரும்போது நின்றுவிட்டனர். அதன் பின் அவர்களால் செல்ல முடியவில்லை.

"மனமே கைலாயம்" மீண்டும் முனிவரின் குரல் மன் னரின் காதில் விழுந்தது. அந்த இடத்திலேயே, மன்னரும் தேவியரும் கைலாய தரிசன பலனை பெற்று மகிழ்ச்சி அடைந்து, யாத்திரையை நிறைவு செய்தனர்.

புத்திர காமேஷ்டி யாகம் அங்கு நடத்தி அங்கே கோவிலை அமைத்து, கைலாச நாதர் சிவனுக்கும், ஆவு டைய நாயகி அம்பிகைக்கும் திருநாமம் சூட்டி கோவிலை கட்டி, கும்பாபிஷேகம் நடத்தி வழிபட்டனர்.

அதன் பலனாக ஆதிபராசக்தி அங்கையற் கன்னி யாக அன்னை மீனாட்சியே அவதரித்து பல்வேறு திருவிளையாடல்களை நடத்தி மதுரையை அரசாட்சி செய்து மக்களை காத்து வருவது இன்று பக்தர்களால் நம்பபட்டு வருகிறது.

இவ்வளவு சிறப்புகளைப் பெற்ற இத்திருக் கோவில் சுமார் 88 ஆண்டுகளுக்கு பிறகு சிவனடியார்கள் வழங்கிய நன்கொடையால் திருப்பணிகள் செய்யப்பட்டு ஆவுடைய நாயகி சமேத கைலாசநாதர் திருக்கோவில் மகா கும்பாபி ஷேகம் கடந்த (6.3.2022) ஞாயிறு அன்று நடந்தது. இங்கு சிறப்பு அம்சமாக பிரம்மனுக்கு தனி சன்னதியும் கல்வி ஞானம் தரும் நவகிரங்களின் புதன் பகவான் வேறு எங்கு இல்லாத வகையில், சிம்ம வாகனத்தில் காட்சி தருகிறார்.

வேம்பத்தூரில் ஆயிரக்கணக்கான தமிழ் புலவர் களும், வேத பண்டிதர்களும் கைலாசநாதரை வணங்கி ஞானம் பெற்று சிறந்து விளங்கியுள்ளனர்.

இதை அறிந்த கம்பர், ஒட்டக்கூத்தர், காள மேகர், கபிலர், பரணர், வேம்பத்தூரில் அவதரித்த கவிராஜபண்டிதர் போன்ற சங்ககால புலவர்கள் பெரும் பேர் பெற்று புகழ் அடைந்தனர்.

80 ஆண்டுகளுக்கு முன்பு, பிறகளூரை சேர்ந்த சின்ன கருப்பன் அம்பலம் தனக்கு ஆண் குழந்தை வேண்டி, அதன் பலனாக இக்கோவிலை சீரமைத்து பல சன்னதிகளை உருவாக்கினார். அதன்பின் தற்போது பெரு முயற்சியோடு சிவபக்தர்களால் கும்பாபிஷேகம் நிறைவுபெற்று, தற்போது தினமும் மண்டல பூஜைகள் நடைபெற்று வருகிறது.

அன்னை மீனாட்சி தேவியே இங்கு அவதரித்த தால், இங்கு வந்து தரிசனம் செய்யும் பக்தர்களுக்கு கைலாயம் சென்று வந்த பலனும், வெகு நாட்களாக குழந் தை இல்லாதவர்களுக்கு குழந்தை பாக்கியம் கிடைத்தும் வரு கிறது.

பல கிராமங்களில் தற்போது கைலாசம், ஆவுடை யம்மாள் எனபெயர் உடைய வயதானவர்களை இங்கு காணலாம். ஆவுடையநாயகி அம்பாள் சமேத கைலாசநாதர் திருக் கோவிலுக்கு மதுரை, சிவகங்கை ஆகிய ஊர்களில் இருந்து நேரடி பஸ் வசதி உள்ளது. மதுரை ராமேசுவரம் நான்கு வழி சாலையில் இருந்து திருப்பாசேத்தி வழியாக எளிதாக வேம்பத்தூரை அடைய லாம். மேலும் இத்திருக் கோவில் பற்றி அறிய 9790325083 எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

மதுரகாளியம்மன் துணை

# நடந்ததை மறந்திடுங்கள். நடப்பதை நினைத்திடுங்கள், நடக்கப்போவதை அறிந்திடுங்கள்

**ஆம், குரு பார்க்க மாட்டாரா? சனி கருணை காட்டமாட்டாரா?**
**ராகு நற்பலனை கொடுப்பாரா? கேது கேடுகளை தடுப்பாரா?**
**சுக்கிரன் அள்ளித்தரமாட்டரா? சூரியன் ஒளிவீச மாட்டாரா? சந்திரன் சகலமும் அளிப்பாரா?**

என இன்றைய சமூகம் ஒருவித குழப்பநிலையில் சுழன்று கொண்டிருக்கின்றது, ஜாதகங்களை எடுத்துக்கொண்டு தம் வாழ்க்கையில் சாதகங்கள் கிடைத்திடாதா என கோவில் கோவிலாக அலைந்து கொண்டிருப்பதை தினமும் கண்கூடாக காணமுடிகிறது. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கவலைகள்? ஆம், 9–இல் குரு வரமாட்டாரா? நல்ல வரன் அமையுமா? வேலை கிடைக்குமா? சம்பள உயர்வு வருமா? குழந்தை பாக்கியம் உண்டா? லாட்டரியில் காசுமழை கொட்டுமா? ராசிக்கு ஏத்த மாதிரி பெயரை மாத்தலாமா? இல்ல ஊரைவிட்டே கிளம்பலாமான்னு பல குழப்ப நிலையில், நிலை தடுமாறிகிட்டு, தானும் குழம்பிகிட்டு பிறரையும் குழப்பிக்கொண்டிருக்கின்றது சமூகம்.

குரு பார்க்க கோடி நன்மை? கோளறு பதிகத்தை படித்தால் கோள்களால் நன்மை? நவக்கிரகத்தை வலம்வந்தால் நாளும் நன்மை? என பொதுவான பலன்களையே கேட்டு வந்துள்ளோம்.

**எத்தனையோ ஜோதிடர்களை பார்த்தும், எத்தனையோ டிவி சேனல்களை பார்த்தும். வாழ்க்கையில் மாற்றமில்லையா? விடிவு பிறக்கவில்லையா? அனைவருமே பொதுப்பலன்களையே சொல்லி வரும் வேளையில், உங்கள் சுயஜாதக பலன்களை துல்லியமாக அறிந்திட ஓர் அற்புதமான வாய்ப்பு**

## கவலைவேண்டாம்..! இனிமுதல் உங்கள் வாழ்வில் விடியலே..! உங்கள் வாழ்க்கையை உச்சம்தொட வைக்க வந்துவிட்டார்

**ஜோதிஷ் ப்ரவீன, ஜோதிஷ் விஷர்த, ஜோதிஷ் சாஸ்த்ரி, ஜோதிஷ் ஆச்சார்ய, ஜோதிஷ் வாசஸ்பதி டாக்டர்**

# V.S. Hari hara sudan, P.hd.,

குரு அருளே திருஅருள் என்ற திருவாய்மொழிகேற்ப, குழந்தை பருவத்திலிருந்தே பாரம்பரிய ஜோதிட ஆஸ்தான கலை குடும்பத்தில் பிறந்து, கடந்த 20 ஆண்டிற்கும் மேலாக சாஸ்த்ரிய, தத்துவயியல் மூலம் ஜோதிட கலையில் தேர்ச்சிபெற்று பல்லாயிரக்கணக்கானவர்களின் வாழ்வில் ஒளியேற்றியுள்ளார் ஜோதிஷ் ப்ரவீன, ஜோதிஷ் விஷர்த, ஜோதிஷ் சாஸ்த்ரி, ஜோதிஷ் ஆச்சார்ய, ஜோதிஷ் வாசஸ்பதி டாக்டர் V.S.Hariharasudhan. இவர் நான்கு தலைமுறைகளாக ஜோதிட பாரம்பரியத்தில் கொடிகட்டி பறந்த, நாடி வந்தோருக்கு நல்வழிகாட்டிய ஆன்மீக செம்மல் வேப்பத்தூர் மகாதேவ ஐயரின் பேரன் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆன்மீக உலகில் இதுபோல் அற்புதங்களை நிகழ்த்துவோர் சிலரே. அரிதிலும் அரிது தன்னலம் பாராது பிறர்நலம் காண்போரை காண்பது. தான் கற்ற கல்வியால் பல நிறுவனங்களில் பல பதவிகளை வகித்து வந்தாலும், சமூகம் எனும் நிறுவனத்தை திருத்தியமைக்க தன்னாலான பங்களிப்பை அளித்திட, தன்னையே தியாகம் செய்திட்ட இவரது பணி மகத்தானது. கோடியில் ஒருவருக்கே இவ்வரிய கொடுப்பினை கிடைக்கும். கிடைத்துள்ளது நம் சமூகத்திற்கே பெருமைக்குரியது.



**தங்களது சுயஜாதகத்தை அன்னாருக்கு அனுப்பி அற்புதமான பலன்களை பெறலாம். வாழ்விலும் ஏற்றம்பெறலாம்.**

ஜோதிடர் **V.S.Hari hara sudan, P.hd.,**
No.:2 Raghava Lakshmy Apartments, Raghavan street,
Bhavani Nagar, Ayapakkam, Chennai - 600077.
+91 7339175496 sudancool2001@gmail.com

aanmeegamalar.com

# பங்குனி வசந்த நவராத்திரியில் பண்டாசூரசம்ஹாரம் நடைபெறும் செம்பாக்கம் ஸ்ரீபாலா திரிபுர சுந்தரி, மூலிகை அம்மன் கோயில்

வடதிருவானாக்கா என வழங்கும் (திருப்போரூர் அருகில்) செம்பாக்கம் ஸ்ரீபாலா திரிபுர சுந்தரி மூலஸ்தானத்தில் குழந்தையாகவும், ஸ்ரீமத் ஔஷத லலிதா மகா திரிபுர சுந்தரி விஸ்வரூப மூலிகை திருமேனியாக மூலவராக எழுந்தருளியுள்ள ஸ்ரீசக்ரராஜசபை திருக்கோயிலில், ஸ்ரீபாலா, தருணீ, லலிதா மூன்று திரிபுர சுந்தரி கள் அருளும் 50ஆண்டுகள் பழமையான ஸ்ரீபாலா, பிரசித்தியான இத்தலம் தோன்ற காரணமான காரணமில்லா கருணை பாலிக்கும் மயிலை கற்பகாம்பாள் மற்றும் குருவின் அனுகிரகத்தால் கடந்த 14ஆண்டுகளாக இத்தலத்தில் நான்கு நவராத்திரி விழா நடைபெறுகிறது.

அதில் புரட்டாசி பாலா நவராத்திரி, பங்குனி லலிதா நவராத்திரியில் பிரம்மோற்சவமாக கொடியேற்றம் முதல் தீர்த்தவாரி வரை காலை மாலை யாகசாலை பூஜை, இரண்டு காலமும் வித விதமான வாகன சேவையில் அம்பாள் தரிசனம்.

உட்புறப்பாடு, சகஸ்ரநாம அர்ச்சனை, அன்னதானம் நடைபெறும், அதன்படி இவ்வாண்டு வசந்த கால லலிதா மகா நவராத்திரி பங்குனி, சித்திரை, இவ்விழாவில் முக்கிய நிகழ்வான காமேஸ்வரர் லலிதா திருக்கல்யாணம், பட்டாபிஷேகம், பாலா லாலி உற்சவம், சித்திரை வருடப்பிறப்பு ஸ்ரீபாலா தங்க கவச அலங்கார காட்சி, ராம நவமி திதி மாலை ஸ்ரீபாலா, வாராகி, மாதங்கி, ஸ்ரீலலிதா குதிரை வாகனத்தில் எழுந்தருளி பண்டாசூரசம்ஹார நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

சித்ரா பௌர்ணமியில் 108 குடம் பாலாபிஷேகவிழாவும் நடைபெற உள்ளது, பக்தர்கள் அனைவரும் விழாவில் கலந்து கொண்டு குழந்தை தெய்வம் ஸ்ரீபாலா, ஸ்ரீமத் லலிதா அருள் பெற்று வாழ்வாங்கு வாழ அன்புடன் அழைக்கிறோம், ஆலய தொடர்புக்கு: 97899 21151.

ஸ்ரீ குருப்யோ நம: ஸ்ரீமாத்ரே நம: ஓம் சிவாய நம:



வடதிருவானைக்கா என வழங்கும் (திருப்போரூர் அருகில்) செம்பாக்கம்

## ஸ்ரீபீடம் ஸ்ரீபாலா சமஸ்தானம்.

### ஸ்ரீமத் ஔஷத லலிதா மஹா திரிபுரசுந்தரி (மூலிகை அம்பாள்)

## ஸ்ரீசக்ரராஜசபை திருக்கோயில்

திருப்போரூர் – செங்கல்பட்டு சாலை, ஸ்ரீஜம்புகேஸ்வரர் கோயில் அருகில்,
செம்பாக்கம் கிராமம், செங்கல்பட்டு மாவட்டம் – 603108.



**14வது ஆண்டு ஸ்ரீமத் ஔஷத லலிதா மஹா திரிபுரசுந்தரி - வசந்தகால லலிதா மஹா நவராத்திரி**

## பிரம்மோற்சவ பெருஞ்சாந்தி பெருவிழா அழைப்பிதழ்

## 08-04-2024 பங்குனி அமாவாசை முதல் 23-04-2024 சித்ரா பௌர்ணமி வரை

08–04–2024 திங்கட்கிழமை அமாவாசை
**ஸ்ரீவிநாயகர் உற்சவம்**

09–04–2024 செவ்வாய்க்கிழமை பிரதமை
காலை 9.00 மணிக்குள் **கொடியேற்றம்**
(மாலை) **சிம்ம வாகனம்**

10–04–2024 புதன்கிழமை துவிதியை (மாலை)
(காலை)**சூரியபிரபை** (மாலை)**சந்திரபிரபை**

11–04–2024 வியாழக்கிழமை த்ருதியை (மாலை)
**காமேஸ்வரர் – காமேஸ்வரி**
**ஸ்ரீலலிதா மஹா திரிபுரசுந்தரி திருக்கல்யாணம்**

12–04–2024 வெள்ளிக்கிழமை சதுர்த்தி (மாலை)
**நாக வாகனம்**

13–04–2024 சனிக்கிழமை பஞ்சமி (மாலை)
**அதிகாரநந்தி வாகனம்**

14–04–2024 ஞாயிற்றுக்கிழமை சஷ்டி (மாலை)
**லலிதா பட்டாபிஷேகம் (ஐராவதம்) யானை வாகனம்**
குரோதி தமிழ் வருடப்பிறப்பு உற்சவம்

15–04–2024 திங்கட்கிழமை
சப்தமி (மாலை) **அன்ன வாகனம்**

16–04–2024 செவ்வாய்க்கிழமை
அஷ்டமி (மாலை) **பூதவாகனம்**

17–04–2024 புதன்கிழமை
நவமி (மாலை) **பண்டாசூரசம்ஹாரம்**

18–04–2024 வியாழக்கிழமை
தசமி (மாலை) **காமதேனு வாகனம்**

19–04–2024 வெள்ளிக்கிழமை ஏகாதசி (மாலை)
**புஷ்பவிமானத்தில் திருவீதி உலா**

23–04–2024 செவ்வாய்க்கிழமை **சித்ரா பௌர்ணமி 108 குடம் பாலாபிஷேகம் சர்வஅலங்காரம், புஷ்ப ஊஞ்சல் சேவை.**

தினமும் காலை, மாலையில் யாகசாலை பூஜை, ஸ்ரீபாலா திரிபுர சுந்தரி மூலவர், ஸ்ரீமத் ஔஷத லலிதா மஹா திரிபுர சுந்தரி (மூலிகை அம்பாளுக்கு) ரமாவாணீ லலிதா உற்சவருக்கு விசேஷ, அபிஷேக அலங்கார, சோடஷ மகா தீபாராதனை, அன்னதானம் நடைபெறும், வருக! அருள் பெறுக!

**ஆலய தொடர்புக்கு : 9789921151**

# பிணி நீக்கும் அம்மன் ஆலயங்கள்



❖ தலை வலியால் பாதிக்கப்பட்டவர்கள் மண்டைக் காட்டு பகவதி அம்மனுக்கு. பச்சரிசிமாவு, சர்க்கரை, வெல்லம் சேர்த்து மண்டையப்பம் எனும் பிரசாதத் தை செய்து அம்மனுக்குப் படைக்க தீரா தலை வலியும் நீங்கிவிடும்.

❖ சிவகங்கை நாட்டரசன் கோட்டையில் உள்ள கண்ணுடையநாயகி கண் சம்பந்தமான நோய்களைத் தீர்த்தருள் கிறாள்.

❖ கோவை பெருமாநல்லூரில் கோவில் கொண்டுள்ள கொண்டத்துக்காளியம் மன், சருமத்தில் ஏற்படும் நோய்களை நீக்கியருள்கிறாள்.

❖ திருவிடைமருதூரில் உள்ள வனதுர்க்கா பரமேஸ்வரி அம்பிகை, குழந்தை பிறப்பில் உள்ள தடைகளை நீக்கி, குழந்தை வரம் தருகிறாள்.

❖ சென்னை திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை யில் உள்ள எல்லம்மனுக்கு சர்க்கரைக் காப்பு செய்து வழிபட்டால் சர்க்கரை நோய் கட்டுக்குள் இருப்பதாகச் சொல்கிறார்கள்.

❖ உடலின் எந்த பாகத்தில் நோய் ஏற்பட்டாலும் திருச்சி பெரம்பலூர், சிறுவாச்சூரில் உள்ள மதுரகாளி அன்னையிடம் பிரார்த்தித்துக் கொண்டு, ஆலயத்தி லேயே மாவிடித்து, மாவிளக்கேற்றி, ஆலய பிராகாரத் தில் படுத்து அந்தந்த உடல் பாகத்தில் மாவிளக்கை வைத்து வேண்டிக்கொள்ள அந்த நோய்கள் மாயமாய் மறைந்து விடும்.

❖ ராமேஸ்வரத்தில் உள்ள தனுஷ் கோடியில் நம்புநாயகி அம்மன் திருக்கோவிலைச் சுற்றியுள்ள திருக்குள தீர்த்தங்கள் பல்வேறு நோய்களைப் போக்கும் தன்மை கொண்டவை.

❖ சென்னை மயிலாப்பூர் கச்சேரி சாலைபகுதியில் உள்ள முண்டகக் கண்ணியம்மன், கண் நோய்களை நீக்குவதில்நிகரற்ற வளாக விளங்குகிறாள்.

❖ திண்டுக்கல் நத்தத்தில் உள்ள மாரியம்மன் உடல் ரீதியான எல்லா பிணிகளையும் தீர்த்தருள் புரிகிறாள். அன்னையின் அருளால் பலன் பெற்றவர்கள் கரும்புத் தொட்டில் கட்டு தல், தீச்சட்டி எடுத்தல் என நேர்த்திக் கடன் செலுத்துகிறார்கள்.

❖நவ பாஷாணத்தால் ஆன அஷ்டதசபுஜ மகாலட்சுமி துர்க்கை அம்மனை புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள குறிச்சியில் தரிசிக்கலாம்.

❖நாமக்கல் ராசிபுரத்தில் உள்ள நித்ய சுமங்கலி மாரியம்மனுக்கு கண் மலர் வாங்கி சாத்தினால் கண் சம்பந்தமான அனைத்து நோய்களும் நீங்கும்.

❖தஞ்சாவூர், வல்லத்தில் ஏகௌரி அம்மன் அருள்கிறாள். இந்த அம்பிகை தன் பக்தை களின் கணவர்களை நோய்களில் இருந்து காப்பதில் வல்ல வள். அதனால் பயன் பெற்ற பக்தைகள் ஆலயத்திற்கு எருமைக்கன்றை தானமாக வழங்குகின்றனர். மேலும் குழந்தைப் பேற்றில் தடை உள்ள பெண்கள் இந்த அம்பிகையின் சந்நதியில் தரப்படும் எலுமிச்சை சாற்றை அருந்த அன்னையின் அருளால் அவர் களுக்கு அந்த பாக்கியம் கிட்டுகிறது.

❖ சென்னை மேற்கு சைதாப்பேட்டைஜோன்ஸ் சாலை சந்திப்பில் கோவில் கொண்டுள்ள கடும்பாடிச் சின்னம் மனிடம் உப்பு மிளகு வாங்கி செலுத்துவதாக பிரார்த் தனை செய்தால் சரும நோய்கள் நீங்குகின்றன. அம்மை நோய் நீங்க ஆலயத்தின் கரு வறையில்வழங் கப்படும் சங்கு தீர்த்தம் அருமருந்தாய் அமைகிறது.

❖ கனவுத் தொல்லைகளால் பாதிக்கப்பட்டவர்கள் தூத்துக்குடி வசவப்புரத்தில் உள்ள அலங்காரச் செல்வி அன்னையை தரிசித்து, அதிலிருந்துவிடுபடு கின்றனர். மூலஸ்தானத்தில் மாரி, காளி என இரு அம்பிகைகள் வீற்றருளும்தலம் நீலகிரிமாவட்டம், உதகையில் உள்ள சந்தைக்கடை மாரியம்மன்கோவில். கண் நோய்களையும் கொடிய நோய்களையும் இந்த இரட்டை அம்பிகைகள் தீர்க்கிறார்கள்.


Dr. S. தன்வந்திரி கார்த்திக்வேல்



தன்வந்திரி
ஆயுர்வேத வைத்தியசாலை
அரசு பதிவு பெற்ற மருத்துவமனை
HOSPITAL Regn. No. : MADUAYU20210028270 • ISO 9001 : 2015 CERTIFIED HOSPITAL
இங்கு தங்கி சிறப்பு சிகிச்சை பெறுபவர்களுக்கு மருத்துவ காப்பீடு வசதி உண்டு

மதுரை தெப்பக்குளம்:
அனுக்கிரஹா இல்லம், கண்ணன் டிபார்ட்மெண்ட்ல் ஸ்டோர் எதிர்புறம், அன்னை சந்திரமதி கல்யாண மஹால் அருகில், பங்கஜம் காலனி, தெப்பக்குளம், மதுரை - 625 009 அலைபேசி: 93601 32500

சென்னை:
16/25, சந்தானகிருஷ்ணன் தெரு, நேரு நகர், அஸ்தினாபுரம் ரோடு, MIT front கேட் அருகில், குரோம்பேட்டை, சென்னை - 600 044 அலைபேசி: 75024 99666

இராமநாதபுரம் கிளை:
NO 9, RR சேதுபதி நகர். காவல் நிலையம் பின்புறம். இராமநாதபுரம். அலைபேசி: 9944167183. 9360132498

41/130-A, பாலாஜி தெரு, அழகப்பன் நகர், மதுரை 625 003.
Email: drkarthic@gmail.com web: www.drkdhanvanthriclinic.com
Ph: 0452-2692647 mobile: 87604 44404, 73731 166111, 80980 01791



தலைமை மருத்துவர் :
Dr. S. தன்வந்திரி கார்த்திக்வேல்
B.A.M.S., MD., FICA., PG Geriatrics



# சுயம்புவாக தோன்றிய ஸ்ரீ நாராயணி தேவியும்

## சக்தி அம்மாவின் சமூக சேவையும்

வேலூர் தங்க கோவில் இன் சிறப்பு அம்சங்கள்!! உலகப் பிரசித்தி பெற்ற ஸ்ரிபுரம் தங்க கோவில் வேலூர் நகரத்தின் மாலை கொடி எனும் இடத்தில் அமைந்துள்ளது. மகாலட்சுமி காக எழுப்பப்பட்டிருக்கும் இந்த கோவில் முழுவதும் தங்க முலாம் பூசப்பட்ட தாக காட்சியளிக்கிறது.

இந்த கோவிலை கட்ட 600 கோடி ரூபாய் செலவு உள்ளதாக சொல்லப்படுகிறது.

தங்கக் கோயிலை சுற்றி 10 அடி அகலத்திற்கு தண்ணீர் நிரப்பப்பட்டுள்ளது. கோவிலுக்குள் நுழைந்தவுடன் ஒரு தனி மண்டபமும் அதன் எதிரே செயற்கை நீரூற்று போலும் கண்ணைக் கவரும் வகையில் அமைக்கப்பட்டிருக்கிறது.

இந்த கோவிலின் மண்டபத்தின் பின்னால் மனிதனின் 18 வகையான குணங்களை தாண்டி இறைவனிடம் செல்வதை உணர்த்தும் வகையில் 18 நுழைவு வாயில்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும் அந்த நட்சத்திரத்தின் நடுவில் வட்ட வடிவில் கோயில் உள்ளது. இந்தக் கோயிலை பார்த்தால் ஸ்ரீசக்கரம் போன்றே தெரியும்படி கோவிலை அமைத்துள்ளனர்.

இந்த ஸ்ரீநாராயணி அம்மனின் எதிரே 27 அடி உயரத்தில் ஐம்பொன்னால் ஆயிரம் திரிகள் ஏற்றக்கூடிய விளக்கு ஒன்று காணப்படுகிறது.

கோவிலை சுற்றிலும் புல்வெளியும் அதன் நடுவில் சுதையால் ஆன பொருட்களின் லட்சுமியும் சரஸ்வதியும் மாரியம்மன் சிலைகளும் அமைக்கப்பட்டுள்ளது..

மேலும் கோயிலுக்குள்ளேயே செயற்கையான மரங்களும் மலைகளும் குளங்களும் நீர்வீழ்ச்சிகளும் காண்போருக்கு மகிழ்ச்சியூட்டும் வகையில் அழகாக அமைக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்தக் கோவிலில் உலகின் மிகப்பெரிய வீணையும் 10,008 திருவிளக்கு அமைக்கப்பட்டிருக்க.

ஆசியாவிலேயே மிகப் பெரிய பொற்கோவில் ஆகும் . பலரும் கோவிலுக்கு செல்வது அங்கிருக்கும் இறைவனை வணங்கி அவனது செயலாற்றலை என்னை அதிசயிக்க தான்.

நம் நாட்டில் இருக்கும் சில வழிபாட்டுத் தலங்களை கண்டாலே போதும் அதுவே அதிசயிக்கும் வகையில் தான் அமைக்கப்பட்டிருக்க. அப்படி அமைக்கப்பட்ட திருத்தலங்களில் ஒன்றானதே தங்க கோவில் என்று அழைக்கப்படும் ஸ்ரீபுரம் ஸ்ரீ லட்சுமி நாராயணி திருக்கோவில் ஆகும்.

இந்த கோவில் சுமார் 500 ஆண்டுகளுக்கு முன்பு ஸ்ரீபுரம் என்ற இந்த பகுதியில் சுயம்புவாக ஸ்ரீ நாராயணி தேவியின் சிலை தோன்றியதாகும் அப்போது அந்த சிலையை சுற்றி ஒரு சிறு கோவில் எழுப்பப்பட்டு வழிபட்டு வந்ததாகவும் வரலாற்றை அறிந்தவர்கள் கூறுகிறார்கள்.

இந்த நாராயணி தேவிக்கு தங்கத்தாலான கோயிலைக் கட்டும் விருப்பம் மேலிட அவரது முயற்சியால் 15 ஆயிரம் கிலோ தங்கத்தை பயன்படுத்தி கடந்த 2007 ஆம் ஆண்டில் இக்கோவில் கட்டி முடிக்கப்பட்டது.

இக்கோயிலின் விசேஷ அம்சம் ஆக கோவிலின் தெய்வமாக நாராயணி தேவி சுயம்புவாக இருப்பதாகும். இந்த கோவிலிலும் அனைத்து பகுதிகளுமே முழுக்க சுத்த தங்கத்தால் முலாம் மற்றும் தகடுகள் பொருத்தி செய்யப்பட்டதாகும்.

இந்தக் கோவிலில் இந்தியாவிலேயே முழுக்க முழுக்க தங்கத்தால் ஆன கோவில்களை இது இரண்டாவது கோவிலாக திகழ்கிறது.

ஸ்ரீபுரம் ஸ்ரீ லட்சுமி நாராயணி பொற்கோவில் பிர மிக்கவைக்கும் கலை நுணுக்கத்துடன் சிருஷ் டிக்கப்

aanmeegamalar.com

பட்டுள்ளது.

மூலவரான அன்னை லட்சுமி நாராயணி 9அடி உயர விக்ரமாக அமைக்கப்பட்டு அருள் பாலித்து வருகிறாள். மஞ் சள் நிறத்தில் தக தக என்று மின்னும் தங்கக்கோயில் ராஜகோபுரம் 48 அடி உயரத்தில் 5 சிலைகளுடன் அமைக்கப்பட்டு இருக்கிறது. இதில் கருவறை, மகா மண்டபம், வசந்த மண்டபம் உள்ளன. தங்கத்தால் ஆன இந்த மூன்று மண்டபங்களிலும் கலை நயம் மிக்க சிற்பங்களுடன் கூடிய 50க்கும் மேற்பட்ட தூண்கள் தாங்கி நிற்கின்றன. தங்கக்கோவிலை சுற்றி 9 அடி ஆழத்தில் குளம் வெட்டப்பட்டுள்ளது. அதில் தண்ணீர் நிரப்பப்பட்டு மின் விளக்குகளில் ஒளியில் தங்கக்கோயிலின் பிம்பம் தக தக என மின்னுவது ரம்மியமான அழகு.



ஒவ்வொரு நாளும் சுமார் 10 மணி நேரம் பூஜை நடைபெறுகிறது, சுயம்பு சன்னதி வழிபாடு, நாராயணி சன்னதி வழிபாடு, ஆதி நாராயணி சன்னதி வழிபாடு, புற்று நாராயணி சன்னதி வழிபாடு, துளசி பூஜை, சூரிய பூஜை, கஜ பூஜை, அஸ்வ பூஜை, கோ பூஜை, ஸ்ரீ மங்கல நாராயணிக்கு 27 வகையான அபிசேகங்களுடன் அபிஷேக ஆராதனை பூஜை. என்று தினமும் இவ்வாலய ஸ்தாபகர் ஸ்ரீ சக்தி அம்மா பூஜை செய்கிறார்கள்.

பாறை மலையாக இருந்த இருமலைக்கோடி கைலாசகிரிமலை, இன்று பசுமை மலையாக மாறி இருக்கிறது. காரணம் ஸ்ரீ சக்தி அம்மா வின் இயற்கையை நேசித்து பாதுகாக்கும் கருணை உள்ளம். ஆண்டுக்கு ஒரு லட்சம் மரங்கள் வீதம் இதுவரை பல லட்சத்துக்கும் மேற்பட்ட மரங்களை இந்த கைலாசகிரி மலையில் ஸ்ரீ நாராயணி பீடம் சார்பில் நடச் செய்து, இருமலைக்கோடியை பசுமை ஸ்தலமாக ஆக்கியுள்ளனர்.

மேலும் நாராயணி பீட ஸ்தாபகர் சக்தி அம்மா அவர்கள் ஆன்மிகத்தில் மட்டும் ஈடுபடாமல் சமுதாயப்பணி, மருத்துவ பணி, கல்விப்பணி என்று பல்வேறு சமுதாயப்பணி ஆற்றிவருவதால் பண் முகம் கொண்ட குரு வீற்றிருக்கும் ஸ்தலமாகவும் இந்த தங்க கோவில் திகழ்கிறது.

**தரிசன நேரம்!**

காலை 7 முதல் இரவு 8 மணிவரை தொடர்ச்சியாக கோயில் திறந்திருக்கும்.

**திருவிழாக்கள்!**

பௌர்ணமியன்று பூஜைகள், வருடப்பிறப்பு விழா, ஸ்ரீசக்தி அம்மா பிறந்தநாள் விழா,சரஸ்வதி யாகம், தமிழ்ப் புத்தாண்டு விழா, மே 8ல் சக்தி அம்மா ஞானம் பெற்ற தின விழா, வரலட்சுமி பூஜை,ஸ்ரீபுரம் ஆண்டு விழா, நவராத்திரி விழா, தீபாவளி சிறப்பு வழிபாடு முதலியன.




# அமைதியை கடைபிடித்தால் அருள்தரும்
# பாதாள செம்பு முருகன்




திண்டுக்கல்லிருந்து பழனி செல்லும் வழியில் அமைந்துள்ளது பாதாள செம்பு முருகன் திருக்கோயில், பாதாள செம்பு முருகன் கோவிலில் மூலவரோ, உற்சவமூர்த்தியோ இல்லை. முன்னோர்களின் வழிகாட்டு தலின்படி, இந்த இடத்தில் கோவில் இருந்ததாக சொல்லப் பட்டதன் அடிப்படையில் போகர் சித்தரின் அவதாரமான திருக்கோவிலூர் சித்தரால் உருவாக்கப்பட்டு, தற்போது நாம் கண்டு வழிபடும் கோவில் முற்றிலும் புதிதாக வடிவமைக் கப்பட்டு, சிற்ப சாஸ்திரத்தின் அடிப்படையில் கட்டப்பட்டது. தல விருட்சமாக மலை நெல்லி உள்ளது. வம்சா வழியாக வழிபட்ட இடத்தில் நமது பாதாள செம்பு முருகன் வடிவமைக் கப்பட்டு, இன்று அருளை வாரி வழங்கும் வள்ளலாக நாம் உணர்ந்து வழிபட்டு மகிழ்கிறோம்.

இந்தக் கோவிலானது கந்தமாறன் வழியில் வந்த, பரம் பரை அறங்காவலர்களின் முயற்சியால் 2021 ஆம் ஆண்டு ஆவணித் திங்கள் நான்காம் தேதி 21.08.2021 குடமுழுக்கு செய்யப்பட்டு, அதனை ஒட்டி மண்டல பூஜைகளும் நடை பெற்றன.

இறைவனுக்கு எப்படி பூ மாலைகள் சாற்றி வழிபடுவது வழக்கமோ அதேபோல பாதாள செம்பு முருகனுக்கு பக்தர்கள் இன்றல்ல தொன்று தொட்டு செவ்வாய் பகவானுக்கு உரிய கருங்காலி மாலைகள் கருங்காலி வேல் போன்றவை முருகனுக்கு சார்த்தி பூஜை செய்து பயன்பெற்று வருகின்றனர்!

பாதாள செம்பு முருகன் சன்னதியில் சுதந்திரஇந்தியா விற்கு முன்பிருந்தே நாட்டிற்காக போர்புரிந்த போர்வீரர் களுக்கும், இன்றைய பாரத நாட்டைக்காக்கும் இராணுவ வீரர்களுக்கும், பரிவட்டம் கட்டி, முதன்மை மரியாதை செய்வது ஆலய நிர்வாகத்தின் மரபாக இருந்து வருகிறது!

பாதாளம் என்றால் தமிழில் பல்வேறு பொருள்கள் உண்டு. ஒன்று அளவு கடந்தவன் என்றும், மற்றொன்று வலிமை மிகுந்தவன் இராகு அந்த ஆக ஆற்றல்கள் அதிகமுள்ள நமது பாதாள செம்பு முருகனை வழிபடுவதால் நமது தீவினைகள் தொலைந்தோடும் என்பதே உண்மை

கோவில் எல்லையான இராமலிங்கம்பட்டி ஊர், எல்லைப்பட்டி. பகுதியிலிருந்து மௌனமாக வந்து முரு கனை மனமுருகி வழிபட்டு பிறகு வெளியில் வந்து இராமலிங்கப்பட்டி, எல்லைபட்டி வரை ஒரு வார்த்தைகூட பிறருடன் பேசிக்கொள்ளாமல் மோனநிலை மௌனத்தை கடைப்பிடித்தாலே போதுமானது. உங்கள் மனதில் நினைத்த வேண்டுதலும் நிறைவேறும் என்பதில் ஐயமில்லை!

பாதாள செம்பு முருகனிடம் மௌனத்தில் இரஞ் சினால் மட்டுமே வேண்டுதல் நிறைவேறும் என்பது நமது ஆலயத்தின் ஐதீகம் மௌனத்தில் இருப்பது என்பது மோன நிலையில் இருக்கும் ஆற்றலை வழங்கும் மௌனத்தினை அனுபவபூர்மாக உணர்ந்த பக்தர்கள் வீண் விவாதங்களில் ஈடுபடாமல் இறையனார் எம்பெருமான் பாதாள செம்பு முருகனின் ஆலய வளாகத்தில் அமைதி காத்து அவனின் அருளை முழுமையாகப் பெற்று நலம் எய்துகின்றனர்

மாற்றுத்திறனாளிகள், மற்றும் கர்ப்பிணிப் பெண்கள் திருக்கோவில் நிர்வாகிகள் வழிபட தனிவரிசை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மற்றவர்கள் யாராயினும், கண்டிப்பாக இலவச தரிசன வரிசையிலேயே வர வேண்டும் என்ற நடைமுறை கடைபிடிக்கப்பட்டு வருகிறது..


ஸ்ரீகாமாட்சி அம்மன் துணை ஸ்ரீதொட்டிச்சி அம்மன் துணை ஸ்ரீபதினெட்டாம்படி கருப்பன் துணை
மூன்று தலைமுறை கண்ட கைராசியான ஸ்தாபனம்
பீனாஸ் பத்திர எழுத்தகம்
பத்திர எழுத்தர்

Prop.N.P.வேல்முருகன் B.Com
State Document Writer
செல்: 99526 39497
95851 88741

# முருகனின் தோற்றங்களும் வணங்குவதால் கிடைக்கும் பலனும்



**ஸ்ரீ பாலசுவாமி:** இவர், உடல் ஊனங்களையும், குறைகளையும் அகற்றும் தெய்வம். இவரை வழிபடுபவர்களுக்கு உடல் நலம் கிடைக்கும். திருச்செந்தூர், திருக்கண்டிர், ஆண்டாள் குப்பம் கோயில்களில் பாலசுவாமி திருவுருவம் இருக்கிறது.

**ஸ்ரீ தேவசேனாதிபதி:** இவரை வழிபட்டால் மங்களகரமான வாழ்வு கிடைக்கும். சென்னிமலை யாண்டவர் திருக்கோயிலில் கர்ப்பக்கிரக மாடம் ஒன்றில் இந்த திருவுருவம் உள்ளது.

**ஸ்ரீ பிரம சாஸ்தா:** இவரை வழிபட்டால் எல்லா வகைவித் தைகளிலும் தேர்ச்சி பெறலாம். சகல வித கலையறிவும் அதிகரிக்கும். கல்வியில் தேர்ச்சி கிட்டும். காஞ்சிபுரத்தில் உள்ள குமரக் கோட்டம் ஆனூர், பாகசாலை, சிறுவாபுரி ஆகிய இடங்களில் பிரம்மசாஸ்தா திருக்கோலம் உள்ளது.

**ஸ்ரீ கந்தசுவாமி:** இவரை வழிபட்டால் சகல காரியங் களும் சித்தியாகும். பழனிமலை ஆண்டவர் திருவடிவம் இது.

**ஸ்ரீ கஜவாகனர்:** இவரை வழிபட்டால் துன்பங்கள் விலகி ஓடும். திருமருகல், மேல்பாடி, சிதம்பரம் நடராஜர் கோயில் கீழைக் கோபுரம் ஆகிய இடங்களில் யானை மீதிருக்கும் இவரது திருவுருவம் உள்ளது.

ஸ்ரீ கிரவுஞ்சபேதனர்: இவரை வழிபட்டால் துன்பங்கள் விலகும். மனச்சஞ்சலம் அகலும். திருநெல்லிக்கா, திருக் குறங்குடி, திருநளி பள்ளி ஆகிய இடங்களில்இவரது திருவுருவம் உண்டு.

**ஸ்ரீ கார்த்திகேயா:** இவரை வழிபட்டால் சகல சவுபாக்கியங்களும் வந்து சேரும். கார்த்திகை நட்சத்திர நாட்களில் இவரை வழிபடுவது விஷேசமான பலன்களைத் தரும். கும்பகோணத்தில் உள்ள கும்பேஸ்வரர் கோயிலிலும், தாராசுரம் ஐராவதீச்வரர் கோயிலிலும் கார்த்திகேயர் திருவுருவம் உள்ளது.

**ஸ்ரீ குமாரர்:** இவரை வழிபட்டால் ஆணவம் அடியோடு நீங்கும். நாகர்கோவில் அருகில் இருக்கும் குமாரகோவிலில் இவரது திருவடிவம் உண்டு. கங்கை கொண்ட சோழபுரத்தில் இவருக்குப் பஞ்சலோக விக்கிரகம் இருக்கிறது.

**ஸ்ரீ சேனானி:** இவரை வழிபட்டால் பகை அழியும். போட்டிகளில் வெற்றிகிடைக்கும். பொறாமை நீங்கும். தேவிகாபுரம் ஆலயத்தில் சேனானி திருவுருவம் இருக்கிறது.

**ஸ்ரீ சரவணபவர்:** தன்னை வழிபடும் அடியவர்களுக்கு மங்கலம், ஒலி, கொடை, சாத்வீகம், வீரம் முதலிய குணங்களை அளிப்பவர். சென்னிமலை, திருப்போரூர் ஆகிய இடங்களில் இவரது திருவடிவம் இருக்கிறது.

**ஸ்ரீ சக்திதரர்:** இந்த முருகனை வழிபட்டால் நினைத்த காரியங்கள் வெற்றியுடன் முடியும். திருத்தணிகையில் எழுந்தருளியிருக்கும் மூலவர் திருவடிவம் ஞானசக்திதரர்' திருக்கோலமாகும்.

**ஸ்ரீ சிகி வாகனர்:** மயில் மீது இருக்கும் முருகன் அருட்கோலம் இது. ஆலயம் பலவற்றில் அழகுற அமையும் திருவடிவம். தன்னை வழிபடுபவர்களுக்கு இன்பமான வாழ்வு அளிப்பவர்.

**ஸ்ரீ சோமாஸ்கந்தர்:** இவரை வழிபட்டால் சிவசக்தியை சேர்த்து வழிபட்ட பலன் கிடைக்கும். ஆலயப் பெருந் திருவிழாவின் போது பஞ்சமூர்த்திகளில் முதல்வராகவும் திருத்தேரில் மீது எழுந்தருளி அருள் தருபராகவும் உள்ள அற்புத வடிவம்.

**ஸ்ரீ சுப்பிரமணியர்:** இவர் தன்னை வழிபடும் பக்தர்களின் வினைகளை நீக்கி ஆனந்தப் பேற்றினை அளிக்கக் கூடியவர். நாகை மாவட்டத்திலுள்ள திருவிடைகழி முருகன் கோயில் மூலவர் சுப்பிரமண்யர் ஆவார்.

**ஸ்ரீ வள்ளி கல்யாண சுந்தரர்:** இவரை வழிபட்டால் திருமணத்தடைகள் விரைவில் அகலும்.




இறைபணியில் **P. முருகேசன்** உரிமையாளர்

## சுவாமி விலாஸ் விபூதி ஸ்டோர்

186, 6வது தெரு பெரியப்பா நகர், பழனி, செல்9443012588




மாதம் இரண்டு முறை வெளிவரும் "ஆன்மிகமலர் மெயில் புத்தக(ம்)"த்தை

aanmeegamalar.com

இணையதளத்தில் இலவசமாக படிக்கலாம்

175 க்கும் மேற்பட்ட இதழ்கள் உள்ளன



31.03.2024

சிறப்பிதழ்





ஆசிரியர், வெளியீட்டாளர்

N.P.சந்திரன்

C.V. நடராஜன்

செல்: 9444228203

•••

முதன்மை செய்தியாளர்:

அழகுராஜா

செல்: 9994323622

•••

துணை ஆசிரியர்கள்

ஷியாம்சுந்தர்,

ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய்,

குருபிரியா செல்: 9894595909

வேல் செல்: 9003199676

•••

வடிவமைப்பு

SML கிராபிக்ஸ்

செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்

aanmeegamalar.com

நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.


# மதுரை சித்திரை திருவிழா 2024
# ஸ்ரீ மீனாட்சி அம்மன் கோவில்
# கள்ளழகர் கோவில் திருவிழா விபரம்

மதுரை மீனாட்சி அம்மன் கோயில் சித்திரைத் திருவிழா ஏப்ரல் 12, 2024 அன்று (வெள்ளிக்கிழமை) தொடங்குகிறது. அட்டவணை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

**11 ஏப்ரல், 2024 வியாழன்**

வாஸ்து சாந்தி

**12 ஏப்ரல் 2024 வெள்ளிக்கிழமை**

காலை: சித்திரை திருவிழா கொடியேற்றம்,

இரவு: 7 மணி முதல் 10.30 மணி வரை கற்பக விருட்சம், சிம்ம வாகனம்

**13 ஏப்ரல் 2024 சனிக்கிழமை**

காலை: 7 முதல் 9.30 வரை தங்க சப்பரம்

இரவு: 7 மணி முதல் 10.30 மணி வரை பூத, அன்ன வாகனம்

**14 ஏப்ரல் 2024 ஞாயிறு**

காலை: 7 முதல் 9.30 வரை தங்க சப்பரம்

இரவு: 7 மணி முதல் 10.30 மணி வரை கைலாசபர்வதம், காமதேனுவாகனம்

**15 ஏப்ரல் 2024 திங்கள்**

காலை: 9 மணி தங்க பல்லக்கு

இரவு: மாலை 6 மணி முதல் 9.30 மணி வரை தங்க பல்லக்கு

**16 ஏப்ரல் 2024 செவ்வாய்**

காலை: 9 மணி தங்க சப்பரம்

இரவு: 7 மணி முதல் 9.30 மணி வரை வேடர் பரி லீலை தங்க குதிரை வாகனம்

**17 ஏப்ரல் 2024 புதன்**

காலை: 7.30 முதல் 10.30 வரை தங்க சப்பரம்

இரவு: 7.30 மணி முதல் 11.00 மணி வரை சைவ சமய ஸ்தாபித வரலாற்று லீலை ரிஷப வாகனம் (தங்க ரிஷபம், வெள்ளி ரிஷபம்)

**18 ஏப்ரல் 2024 வியாழன்**

காலை: 8 முதல் 10.30 வரை தங்க சப்பரம்

இரவு: 7 மணி முதல் 10.30 மணி வரை நந்தீகேஸ்வரர், யாழி வாகனம்

**19 ஏப்ரல் 2024 வெள்ளிக்கிழமை**

காலை: 10 மணி தங்க பல்லக்கு

மாலை: ஸ்ரீ மீனாட்சி பட்டாபிஷேகம் (பட்டாபிஷேக நேரம்: லக்னம் விரைவில் புதுப்பிக்கப்படும் பெரும்பாலும் மாலை 7 மணியளவில் மிஷிஜி)

இரவு: 9 மணி முதல் 11 மணி வரை வெள்ளி சிம்ஹாசன உலா

**20 ஏப்ரல் 2024 சனிக்கிழமை**

காலை: 7 முதல் 9.30 வரை மரவர்ண சப்பரம்

மாலை: மாலை 6 மணி முதல் 11.30 மணி வரை ஸ்ரீ மீனாட்சி திக்விஜயம் இந்திர விமான உலா

**21 ஏப்ரல் 2024 ஞாயிறு**

காலை: 4 மணி வெள்ளி சிம்ஹாசனம்

காலை: ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கல்யாணம் (விண்மீன் திருமணம்)

இரவு: 7.30 முதல் 11.30 வரை தங்க அம்பாரியுடன் கூடிய யானை வாக னம், புஷ்ப பல்லக்கு

**22 ஏப்ரல் 2024 திங்கள்**

காலை: திருத்தேர் எழுந்தருளல், திருத்தேர் வடம் பிடித்தல், திரு தேர் தேரோட்டம் (ரத உற்சவம், தேர், தேர் திருவிழா)

இரவு: 7 மணி முதல் 10.30 மணி வரை சப்தாவர்ண சாப்ரம்

**23 ஏப்ரல் 2024 செவ்வாய்**

இரவு: 7 மணி முதல் 10 மணி வரை வெள்ளி ரிஷபம் சேவை கள்ளழகர் (கள்ளழகர்)

**21 ஏப்ரல் 2024 ஞாயிறு**

இரவு: அருள்மிகு சுந்தரராஜப் பெருமாள், கலழகர் திருக்கோலத்தில், தங்க பல்லக்கில் மதுரை எழுந்தருளல்

**22 ஏப்ரல் 2024 திங்கள் எதிர் சேவை**

இரவு: ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்ரீ ஆண்டாள் கொடுத்த மாலை சூடு தல்லாகுளம் பிரசன்ன வெங்கடேசபெருமாள் கோவிலில்

**23 ஏப்ரல் 2024 செவ்வாய்**

காலை: ஸ்ரீ கள்ளழகர் வைகை ஆற்றில் எழுந்தருளல் (1000 பொன்சபரம் தேர் தங்க குதிரை வாகனம் ராமராயர் மண்டபத்தில் தண்ணீர் பீச்சுத்தல்) வண்டியூர் வீரராகவப் பெருமாள் திருக்கோவில்

இரவு: சைத்யோபச்சாரம்

**24 ஏப்ரல் 2024 புதன்கிழமை**

காலை: காலையில் சேஷ வாகனம் (வண்டியூர் தேனூர் மண்டபத்தில் இருந்து புறப்படுதல்)

பிற்பகல்: மதியம் கருட வாகனம் மண்டூக மகரிஷிக்கு மோக்ஷம்

நள்ளிரவு: இரவில் ராமராயர் மண்டபத்தில் தசாவதாரக் காட்சி

**25 ஏப்ரல் 2024 வியாழன்**

காலை: மோகனாவதாரம் ( மோகினி அவதாரம் )



பிற்பகல்: ராஜாங்க அலங்காரம் (அனந்தராயர் பல்லக் கில் சேதுபதி மண்டபம் புறப்படுதல்) மைசூர் மண்டபத்தில் புஷ்ப பல்லக்கில் கள்ளழகர் திருக்கோலம்

இரவு: சேதுபதி மண்டபம் பூ பல்லக்கு அலங்காரம்

**26 ஏப்ரல் 2024 வெள்ளிக்கிழமை**

அதிகாலை: பூ பல்லக்கு எழுந்தருளல் (சேதுபதி மண்டபம்)

**27 ஏப்ரல், 2024 சனிக்கிழமை**

அதிகாலை: அப்பன் திருப்பதியில் ஸ்ரீ கள்ளழகர் எழுந் தருளல்


காலை: ஸ்ரீ கள்ளழகர் அழகர் மலை வந்து சேர்தல்.




சித்தர்களின் ஆசிர்வாதத்துடன்
ஸ்ரீ வேல்சித்தா ஆயுர்வேதா மருத்துவமனை
மல்டி ஸ்பெஷாலிட்டி ஆஸ்பிட்டல்
பதிவு கட்டணம் நுழைவுகட்டணம் இல்லை, கன்சல்டிங்பீஸ், டாக்டர் பீஸ் இல்லை.

கை, கால், எலும்பு முறிவு குணப்படுத்துதல், மூலம், பௌத்திரம், சர்க்கரை(சுகர்) உள்ளவர்களுக்கு விரல்கள், கால், பாதித்தவர்களுக்கு எதையும் நீக்க வேண்டாம், குணப்படுத்துதல்
காய்ச்சல், இருமல், ஆஸ்துமா, டிபி, சர்வபற்றுநோய்கள், ஆண்மைகுறை, பெண்களின் கர்ப்பப்பை கோளாறு, குழந்தைபாக்கியம் மற்றும் பல நோய்கள் மல்டி ஸ்பெஷாலிட்டி ஆஸ்பிட்டல்,
பத்தியமில்லா, பக்கவிளைவுகள் இல்லாத (உணவே மருந்து மருந்தே உணவு) எனும் மருத்துவம் சிறந்த மருத்துவமனை
அசோக்நகர் 4வது தெரு, சாந்திநகர் பெட்ரோல் பங்க் சமீபம், கூடல்நகர், மதுரை 625018 தொலைபேசி: 9344121594 / 8428002158 / 77083888252

aanmeegamalar.com






aanmeegamalar.com






# மதுரை கலையகம்

கோவில் குடைகள், தேர்ச்சீலைகள், தோரணங்கள், தொம்பைகள், பல்லக்கு, பன்னாங்கு வகைகள் தயாரிப்பாளர்.



## V.சுந்தரவடிவேல்

Visit:
www.maduraikalaiyagam.com
Cell: 98428 05939

27,மீனாட்சி தியேட்டர் தெரு, தெற்குவெளி வீதி, மதுரை-1



# இறந்த மணமகனை உயிருடன் மீட்ட வாழைமர பாலசுப்ரமணியன்





எத்தனை துன்பங்கள் நம் மனதில் இருந்தாலும் வாழைமர பாலசுப்ரமணியனை பார்த்த மாத்திரத்திலேயே நொடிப்பொழுதில் காணாமல் போகும் படி வசீகரத்துடன் அருள்பாலித்து வருகிறார். இறைவனே தேடி வந்து குடியிருக்கும் கிராமம் தான் விருதுநகர் மாவட்டம் வெம்பக் கோட்டை அருகே உள்ள துலுக்கன்குறிச்சி என்ற சிறிய கிராமம். இக்கோவில் சிவகாசியிலிருந்து சங்கரன்கோவில், கழுகுமலை செல்லும் மெயின் ரோட்டில் அமைந்துள்ளது. சிவகாசியில் இருந்து 17 கிலோ மீட்டர் தூரமாகும்.

பெயர்க்காரணம்...

150 ஆண்டுகளுக்கு முன்னர் முருகப்பெரு மான் மீது அன்பும் ஆழ்ந்த பக்தியும் கொண் டிருந்த வேலாயுதம் என்ற பக்தருக்கு காட்சி கொடுத்து தான் வாழைமரத்தில் குடியிருப்ப தாக கூறி அருள்பாலிப்பதால் வாழைமர பால சுப்பிரமணிய சுவாமி எனஅழைக்கப்படுகிறது.

துலுக்கன்குறிச்சி கிராமத்தில் வாழ்ந்த தேரியப்பர்வீரம்மாள் தம்பதிக்கு மகனாக பிறந்தவர் வேலாயுதம்.

இவர் தினமும் அதிகாலை வெம்பக் கோட்டை வைப் பாற்றில் குளித்துவிட்டு வனமூர்த்தி லிங்காபுரம் விநாயகர் கோவிலில் உள்ள முருகனை தரிசித்துவிட்டு அன்றாட பணிகளை செய்வதையே வழக்கமாக கொண்டிருப்பார்.

வேலாயுதம் வழக்கம்போல் ஒருநாள்அதிகாலை எழுந்து வெம்பக்கோட்டை வைப்பாற்றில் குளித்து விட்டு முருகனை தரிசனம் செய்ய செல்லும்போது ஆற்றில் வெள்ளம் பெருக் கெடுத்து ஓடியதால் ஆற்றை கடக்க முடியாமல் போனது.

அதனால் முருகனை தரிசிக்க முடியாமல் தன் இல்லம் வந்து விட்டார். அன்று முழுவதும் வேதனையுடன் இருந்தார்.

இரவு முருகனின் திருநாமத்தை சொல்லியவாறு கண் அயர்ந்த போது கந்தன் கனவில் வந்து வேலாயுதா என்னை காண எங்கும் செல்ல வேண்டாம். நானே உன்னை தேடி வந்து விட்டேன். நீ ஆசையாக பராமரித்து வரும் வாழைத்தோட்டத்தில் ஒரே ஒரு குலை தள்ளிய வாழை மரத்தில் மட்டும்தான் இருப்பதாக சொல்லி மறைந்தார். மறுநாள் காலை வேளையிலும் குளித்து விட்டு தன்னுடைய தோட்டத்தை நோக்கி ஓடிச் சென்றார் மெய் மறந்து செய்வதறியாது திகைத்து நின்றார். காரணம் கனவில் முருகன் கூறிய படி குலையுடன் வாழை மரம் இருந்து அதிசயம்கண்டு மனமுருகி வேண்டி நின்றார். இச் செய்தி பரவியதால் வாழைமரத்தை பக்தர்கள் வழிபட்டனர்.

ஒருமுறை செவல்பட்டி ஜமீன் அரண்மனையில் பிரதான கணக்கு பிள்ளையின் ஒரே மகனுக்கு திருமண விழாவுக்காக அந்த வாழை மரத்தை வெட்டி சென்றனர். ஆனால் வேலாயு தம் வாழை மரத்தை வெட்ட அனுமதிக்க மறுத்து விட்டார். இதனால் மணமகன் தானே சென்று வாழை மரத்தை வெட் டிக் கொண்டு வருவதாக கூறி தோட்டத்துக்கு சென்றார்.

அவரிடமும் வேலாயுதம் தான் வாழைமரம் தர முடியாது என்று உறுதியாக கூறினார். ஆனால் வேலாயுதம் சொல்வதைக் கேட்காமல் தன் கையில் இருந்த அரிவாளால் மரத்தை ஓங்கி வெட்டினான். அடுத்த கணம் வெட்டிய வாழையிலிருந்து ரத்தம் வெளி யேறி நாகமாக மாறி மணமகனின் காலை தீண்டியது. சிறிது நேரத்தில் மணமகன் இறந்துவிட்டான். கணக்குப்பிள்ளை அழுது புரண்டார். தன் மகனை காப்பாற்றுமாறு வேலாயு தம் காலில் விழுந்து கெஞ்சினார்.

என்னால் ஒன்றும் செய்ய முடியாது என்று முருகனிடம் கேளுங்கள் என கூறினார். நீங்கள் நினைத் தால் காப்பற்ற லாம் என வேண்டினார்கள். வேலாயுதம் தன் கையிலிருந்த பிரம்பால் இறந்த மணமகன் மீது முருகா.. முருகா... முருகா.. என 3 முறை திருநாமத்தை கூறிவிட்டார். உடனே ஒரு அதிசயம் நடந்தது.

இறந்த மணமகன் உயிர் பெற்றான். இதை கண்ட ஜமீன் தார் இந்த இடத்தில் வாழைமர பாலசுப்ரமணியனுக்கு ஒரு கட்டிடம் அமைத்து கொடுத்தார். அதன்படி கோவில் அமைக் கப்பட்டது. கோவிலுக்கு வரும் பக்தர்களுக்கு வேலாயுதம் ஆசி வழங்கினார். அருள்வாக்கு கூறி அனை வருக்கும் நன்மைகள் செய்து வந்தார். இவரது காலத்திற்கு பின்பு அவருடைய மகன் தேரியப்பர் கோவில் திருப்பணியை செய்து வந்தார். ஒருமுறை ஏற்பட்ட திடீர் புயல் மழை நாள் வெள்ளத்தால் கோவில் இடிந்து போனது. இடிந்துபோன கோவிலை புதுப்பிக்கும் வண்ணம் சிறிய அளவில் கோவில் கட்டப்பட்டது.

தேரியப்பர் வாரிசுதாரர்கள் பிழைப்புக்காக வெளியூர் சென்று விட கோவில் பராமரிப்பின்றி சிதிலமடைந்து ஆண்டுக்கு ஒரு முறை வைகாசி விசாகம் தோறும் பால்குடம் எடுத்து வழிபட்டு வருகின்றனர். வாயு மூளையில் உற்சவர் சிலை அழகாக வடிவமைக்கப்பட்டுள்ளது. கருவறையில் புன்னகை தவழும் முகத்துடன் நின்ற நிலையில் இடது கையை தொடையில் வைத்தபடி வலது கையில் அபய முத்திரை பின்னர் வாழைமரம் இருக்குமாறு அற்புத வடிவமைப்புடன் அமைக்கப்பட்டுள்ளது.

எத்தனை துன்பங்கள் நம் மனதில் இருந்தாலும் வாழைமர பாலசுப்ரமணியனை பார்த்த மாத்திரத்திலேயே நொடிப்பொழுதில் காணாமல் போகும் படி வசீகரத்துடன் அருள்பாலித்து வருகிறார்.

இது திருமண தோஷம், புத்திர தோஷம் நோய்களை தீர்க்கும் நிவர்த்தி தலமாக அமைந்துள்ளது. திருமண தடை நீங்கவும் குழந்தை பாக்கியம் பெறவும் நோய்நொடி என்று பெருவாழ்வு வாழவும் சகல சவுபாக்கியம் உடன் வாழையடி வாழையாய் வாழ்வாங்கு வாழ்ந்த ஸ்ரீ வாழைமர பாலசுப்ரமணிய சுவாமி ஆலயம் வந்து வணங்கி வளமோடு வாழ்வோம்.

விருதுநகர் மாவட்டம் வெம்பக்கோட்டை தாலுகா துலுக்கன் குறிச்சியில்
எழுந்தருளி பக்தர்களுக்கு வேண்டிய வரங்களை தந்து அருள்பாலித்துவரும்

# அருள்மிகு வாழைமர பாலசுப்பிரமணிய சுவாமி

## ஆலயத்திற்கு அன்புடன் அழைக்கிறோம்

உலக நன்மைக்காக தினந்தோறும் யாகம், திருமணம்,
குழந்தை வரம் வேண்டும் பக்தர்கள் தங்கள் மனகுறை நீங்க

**தங்கள் கைகளாலேயே**
**யாகம் செய்யலாம்**

### அருள்மிகு ஸ்ரீவாழைமர பாலசுப்பிரமணிய சுவாமி ஆலய முக்கிய விசேஷ தினங்கள்

| | | |
|---|---|---|
| பங்குனி 29 | 11.04.2024 வியாழன் | மாதாந்திர கார்த்திகை |
| சித்திரை 01 | 14.04.2024 ஞாயிறு | சித்திரை விஷு |
| சித்திரை 25 | 08.05.2024 புதன் | மாதாந்திர கார்த்திகை |
| வைகாசி 01 | 14.05.2024 செவ்வாய் | வாழைமர பாலசுப்பிரமணிய ஆலய வருஷாபிஷேகம் |
| வைகாசி 07 | 20.05.2024 திங்கள் | பஞ்சலிங்க ஆலய வருஷாபிஷேகம் |
| வைகாசி 09 | 22.05.2024 புதன் | வைகாசி விசாகம் |
| வைகாசி 23 | 05.06.2024 புதன் | மாதாந்திர கார்த்திகை |
| ஆனி 18 | 02.07.2024 செவ்வாய் | மாதாந்திர கார்த்திகை |
| ஆடி 14 | 29.07.2024 திங்கள் | மாதாந்திர கார்த்திகை |
| ஆடி 23 | 07.08.2024 புதன் | ஆடிப்பூரம் |
| ஆவணி 10 | 26.08.2024 திங்கள் | மாதாந்திர கார்த்திகை |
| புரட்டாசி 06 | 22.09.2024 ஞாயிறு | மாதாந்திர கார்த்திகை |
| புரட்டாசி 17 | 03.10.2024 வியாழன் | நவராத்திரி கொலு ஆரம்பம் |
| ஐப்பசி 03 | 19.10.2024 சனி | மாதாந்திர கார்த்திகை |
| ஐப்பசி 23 | 08.11.2024 வெள்ளி | ஸ்ரீவள்ளி தெய்வானை சமேத ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி திருக்கல்யாணம் |
| கார்த்திகை 01 | 16.11.2024 சனி | மாதாந்திர கார்த்திகை |
| கார்த்திகை 16 | 01.12.2024 ஞாயிறு | தாரகஹார குமாரஷஷ்டி விழா ஆரம்பம் (முகூர்த்கால் நடுதல்) |
| கார்த்திகை 21 | 06.12.2024 வெள்ளி | தாரகஹார குமாரஷஷ்டி விழா ஆரம்பம் (சூரசம்ஹாரம்) |
| கார்த்திகை 22 | 07.12.2024 சனி | புஷ்பாஞ்சலி |
| கார்த்திகை 28 | 13.12.2024 வெள்ளி | திருக்கார்த்திகை மஹா தீபம் |
| மார்கழி 26 | 10.01.2024 வெள்ளி | மாதாந்திர கார்த்திகை |



ஆலயத்தின் சிறப்பு விசேஷங்கள் அனைத்தும் www.youtube.com/MATRIMONYTV மற்றும்
www.matrimonyty.com இணையதளத்தில் நேரடி ஒளிபரப்பு செய்யப்படுகிறது. நிகழ்ச்சியை கண்டு முருகனருள் பெறுக

**தொடர்புக்கு: விழாக் குழுவினர் 9840545860 / 91-8124245573**

aanmeegamalar.com







## தீராத மன குறைகள், வேண்டுதல்களை நிறைவேற்றும்

# திருச்சினமுடைய அய்யனார் ஸ்ரீபத்திரகாளியம்மன்

ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி தாலுகா, பார்த்திப னூர் வழி, நெல்மடூர் ஊராட்சியில் உள்ள கவிராயர் புளியங்குளம்கிராமத்தில் பிரசித்தி பெற்ற அருள்மிகு ஸ்ரீ திருச்சினமுடைய அய்யனார் 21 பந்தி, 61 சேனை கொண்ட ஸ்ரீ பத்திரகாளியம்மன் திருக்கோவில் உள்ளது.

இருநூறு ஆண்டுகளாக இக்கோவிலில் வழிபாடு செய்யும் குடிமக்கள் தமிழகம் முழுவதும் உள்ளனர். இங்கு ஆண்டு தோறும் நடைபெறும் மாசிகளரி விழா பிரசித்தி பெற்றது ஆகும் பத்துநாள் நடைபெறும் விழாவில் பாரிவேட்டை நடைபெறும் நிகழ்ச்சி முக்கியமான திருநாளாக உள்ளது. அன்று காலை முதல் இரவு வரை பக்தர்கள் தீச்சட்டி, உருண்டு கொடுத்தல், கரும்பு தொட்டில் எடுத்தும் வழிபாடு செய்வார்கள்.

அன்றைய தினம் ஏராளமான பக்தர்கள் காளியம்மன், கருப்பர் வேடமிட்டு ஆடிவந்து அருள் வாக்கு கூறுவார்கள். இங்கு சிவராத்திரி அன்று அம்மனுக்கு பச்சாலைப்ப யிர்கள் பரப்பும் பூஜையும், சுவாமி வேட்டைக்கு செல்லும் நிகழ்ச்சியும், அதை தொடர்ந்து 170 கிடாய்கள் வெட்டி படையல் பூஜையும் விழா முடிவில் சாந்தபடுத்தும் வகையில் நடைபெறும் சைவ பூஜையும் சிறப்பு வாய்ந்ததாகும்.





இத்திருவிழாவில் கலந்து கொண்டு ஆயிரக்கணக்கான பக்தர்கள் நேர்த்தி கடன்செலுத்தி வழிபாடு செய்வார்கள். பக்த்தர்களின் தீராத மன குறைகள் நியாயமான வேண்டுதல் திருச்சினமுடைய அய்யனார் ஸ்ரீபத்திரகாளியம்மன் நிறைவேற்றி தருவதாக நம்பபடுகிறது. பல ஊர்களுக்கு காவல் தெய்வமாக இருப்பதால் இக்கோவில் முழுவதும் சுற்று சுவர்ருடன் உடைமரங்கள் நிறைந்து திறந்த வெளியில் காணப்படுகிறது.

சில ஆண்டுகளுக்கு முன்பு இக்கோவிலில் வழிபாடு செய்யும் குடிமக்கள் அய்யனார் சுவாமி மற்றும் சுவாமிகளுடன் கூடிய எழில் மிகு தோரணவாயில் கோபுரம் பக்தர்கள் தங்கும் வசதி செய்யப்பட்டு உள்ளது.



திருச்சினமுடைய அய்யனார் பத்திரகாளியம்மன் மற்றும் விநாயகர், முருகன், லாடசன்னாசி, வீரபத்திரர், சோனைகருப்பர், முனீஸ்வரர், இருளப்பசுவாமி, பெரிய கருப்பர், முத்துகருப்பர், நாக அம்மன், ராக்கச்சி அம்மன், இருளாயிஅம்மன், சடச்சி அம்மன் மற்றும் சப்த கன்னிமார், வேட்டை கருப்பண்ணசாமி என பரிவார தெய்வங்கள் இங்கு அருள் பாலித்து வருகின்றனர். இக்கோவிலில் இடையாத்தூர் வகையறா பரம்பரை பூசாரிகள் பூஜைகளை செய்துவருகின்றனர். கோவிலுக்கு வரும் பக்தர்களுக்கு அனைத்து வசதிகளையும் நிர்வாக தலைவர் விளத்தூர் உ.மணி செய்து வருகிறார்.

ஸ்ரீதிருச்சினமுடைய அய்யனார் 21பந்தி, 61 சேனை கொண்ட ஸ்ரீபத்திரகாளியம்மன் திருக்கோவில் பார்த்திபனூரில் இருந்து அருப்புக்கோட்டை செல்லும் சாலையில் நெல்மடூர் ஊராட்சி கவிராயர் புளியக்குளம் உள்ளது.

ஆலய தொடர்புக்கு செல் 9787681675 9840357909 விழா ஏற்பாடுகளை கோவில் நிர்வாகிகள் பக்தர்கள் விழா குழுவினர் செய்து வருகின்றனர்.

# குழந்தையாக வந்து ஊரை வளப்படுத்திய

# ஸ்ரீசுயம்பு வாழவந்த அம்மன்

இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி அருகே உள்ளது செல்லூர் கிராமம். விவசாயத்தை முழு தொழிலாக கொண்ட இக்கிராமத்தில் பலநூறு ஆண்டுகள் முன்பு கடும் வறட்சி ஏற்பட்டு விவசாயத்திற்க்கு தண்ணீரின்றி பிற ஊர்களுக்கு சென்று பிழைக்க லாம் என கிராம மக்கள் முடிவு செய்து ஊரை விட்டு கிளம்பினர்.

திடிரென குழந்தை ஒன்று அவ்வழியே வந்து "என்னை கவனிக்காமல் எங்கே செல்கிறீர்கள்" எனகூறி சில நிமிடங் களில் மறைந்தது.

சிறுமியை தேடிகொண்டிருந்த போது இடிமின்னலுடன் கனமழை பெய்து கண்மாய்கள் நிரம்பி விவசாயம் செழித்தது.

அதன் பின் கிராம மக்கள் நம்மை வாழவைக்க அம்மனே குழந்தை வடிவில் தோன்றிமறைந்ததாக செவிவழி செய்தி யாக கூறப்படுகிறது.

அதைதொடர்ந்து செல்லூரில் சுயம்புவாக தோன்றிய ஸ்ரீ வாழவந்த அம்மனுக்கு கோவில் கட்டப்பட்டது.

இங்கு விநாயகர், முருகன், சிவகாளி அம் மன் முத்துமாரியம்மன், சப்தகன்னியர், பேச்சி அம்மன், சின்னகருப்பு, பெரியகருப்பு, நாகர் போன்றவையும் பிரதிஷ் டை செய்யப்பட்டு பூஜை கள் நடைபெற்று வரு கிறது.

சிவராத்திரி விழா, ஆடி, நவராத்திரி போன்ற விழாக்கள் நடைபெறுகிறது.

வணங்குபவர்களுக்கு நல்வாழ்வையும், வளங் களை தருவதால் ஸ்ரீசுயம்பு வாழவந்த அம்மன் கோவிலில் வழிபாடு செய்யும் பக்தர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு வாழவந்தாள், வாழவந்தான் என்று அம்மன் பெயரைசூட்டுகின்றனர்.

தமிழகத்தில் உள்ள அனைத்து ஊர்களில் வசிக்கும் ஏராளமானோர்க்கு செல்லூர் ஸ்ரீசுயம்பு வாழவந்த அம்மன் குலதெய்வமாகவும் உள்ளது. பரமக்குடியில் இருந்து செல்லூர் செல்ல அடிக்கடி பஸ்வசதி உள்ளது.








கீதா சமையல்

geetha samayal YouTube channel

ஆயிரம் சமையல் வீடியோக்கள் உள்ளன

aanmeegamalar.com

# வளம் தரும் வாராகி அம்மன்



வாராகி அம்மன் உக்கிரமான தெய்வமாக பார்க்கப்பட்டாலும் அன்பை பொழிவதில் அன்னைக்கு நிகரானவள். வாராகி காயத்ரி மந்திரத்தை ஜெபித்து வணங்கினால் கேட்ட வரங்களை கொடுப்பவள்.வாராகி அம்மன் ராஜ ராஜேஸ்வரி அம்மனின் குதிரைப் படைத்தலைவியாகவும், பத்மாவதி அம்மனின் காவல் தெய்வ மாகவும், சப்தகன்னியரில் ஒருவராகவும் அறியப்படுகிறார்.

**அஷ்ட வாராகி:** மகா வாராகி, ஆதி வாராகி, ஸ்வப்ன வராகி, லகு வாராகி, உன்மத்த வாராகி, சிம்ஹாருடா வாராகி, மகிஷாருடா வாராகி, அச்வாருடா வாராகி என எட்டு வாராகிகள் அழைக்கப்படுகிறார்கள். இந்த எட்டு கோயிலையும் உள்ளடக்கிய அஷ்டவராகி கோயில் சாலாமேட்டில் அமைந்துள்ளது. உலகிலேயே வராகியம்மனுக்கு அமைக்கப் பட்ட முதல் கோயிலாக கருதப்படுகிறது.

இதே போல் நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள வழுவூர் வீரட்டேசுவரர் கோயில் வராகி வழிபட்ட தலமாக உள்ளது. கடலூர் மாவட்டம் நெல்லிக்குப்பத்தில் சப்தமாதாக்கள் கோவில் உள்ளது. இங்கு வராஹி அம்மனுக்கு பஞ்சமி திதியில் பூஜை மற்றும் மஹா யாகம் நடைபெறும்.

தஞ்சை பெரிய கோவிலில் வாராகி அம்மன் வழிபாடு சிறப்பு வாய்ந்தது. பெரிய கோவிலை கட்டிய மாமன்னர் ராஜ ராஜசோழன் போருக்குசெல்லும் முன்பு வராகி அம் மனை வணங்குவதை வழக்கமாக வைத்திருந்தார். மாமன்னர் ராஜாராஜசோழன் இந்த அன்னையின் அருள் பெற்றுதான் எந்த செயலையும் தொடங்குவார். இங்கு வாராகி அன்னை தனி சன்னதி கொண்டு வீற்றிருக்கிறார். வாழைப்பழம் படைக்கலாம். மாலை நேரத்தில் வாராகி அம்மனுக்கு கிழங்கு வகைகளை படைத்து வழிபடுவது சிறப்பானது.

சப்தகன்னியரில் ஒருவரான வராகி அம்மன். திருமாலின் வராக அம்சமாக கருதப்படுகிறார். இவர் வராகமெனும் பன்றி முகத்தையும், எட்டு கரங்களையும் உடையவர். பின் இருகரங்களில் தண்டத்தினையும் கலப்பையையும் கொண் டவர். இவர் கருப்பு நிற ஆடையுடுத்தி சிம்ம வாகனத்தில் அமர்ந்திருக்கிறார்.

கலியுகத்தில் கண்கண்ட தெய்வமான வாராகியை வணங்கினால் பகைவரை அழித்து பக்தரை காத்திடுவாள். கொடிய ஏவல், பில்லி சூனியத்தில் இருந்தும் காப்பாற்றுவாள். நினைத்த காரியம் நிறைவேறும். திருமணத்தடைகள் விலகும், புத்திரபாக்கியம் கிடைக்கும்.

காசி நகரத்தில் வாராகி அன்னைக்கு மிகப்பெரியகோவில் உள்ளது. இங்குள்ள வாராகியை நேரடியாக தரிசிக்க முடியாது துவாரங்களின் வழியாகத்தான் தரிசிக்க முடியும்.

ஞாயிறு கிழமைகளில் வாராகியை வழிபட்டால் நோய்கள் தீரும். திங்கட்கிழமைகளில் வழிபட்டால் மன நல பாதிப்புகள் நீங்கும். வீடு நிலம் தொடர்பான பிரச்சினைகள் தீர செவ்வாய்கிழமைகளில் வராகியை வழிபடலாம். கடன் தொல்லைகள் தீர புதன்கிழமை வழிபடலாம். குழந்தை பேறு கிடைக்க வியாழக்கிழமை வழிபடலாம். கல்வி கேள்வி களில் சிறந்து விளங்கவும் வியாழக்கிழமை வழிபடலாம். வெள்ளிக்கிழமை வழிபட நினைத்த காரியம் நிறைவேறும்.

**அன்பான அன்னை வாராகி:** சப்த மாதர்களில்


வேம்பத்தூர் ஸ்ரீகவிராஜ பண்டிதரின்
ஸ்ரீவராஹி பீடம் அறக்கட்டளை
2/26, பெருமாள் கோவில் தெரு,
வேம்பத்தூர் சிவகங்கை மாவட்டம்-630 565



சேவைகள் விபரம்: ஜாதி மத பேதமின்றி கல்வியில் சிறந்து விளங்கும் மாணவ மாணவிகளுக்கு கல்வி உதவித் தொகை வழங்குதல், பொருளாதாரத்தில் பின்தங்கிய ஆதரவற்ற முதியவர்களுக்கு உதவி செய்தல், ஆலயங்களில் சேவை செய்யும் அர்ச்சகர்களுக்கு உதவுதல்.



SRI VKPVP CHARITABLE TRUST
Ac No:4164367792
IFSC No: SBIN0004898 Vembathur Branch
அணுகவும்: 9894142409
வேம்பத்தூர் வருக ஸ்ரீ கவிராஜபண்டிதர் ஸ்வாமி அருள்பெருக

கோயில்களில் மூலஸ்தான மூர்த்திகள் முதலில் அமைக்கப்பட்டு பின்னரே உற்சவமூர்த்திகள் செய்விக்கப்படுவது வழக்கம். ஆனால் முதலில் உற்சவமூர்த்தியாக அம்பாளை எழுந்தருளச் செய்து விழா எடுத்துக் கொண்டாடி பின்னர் மூலஸ்தான அம்பாள் திருவுருவச் சிலை செய்து அபிஷேக ஆராதனைகள் நடத்தி மகிழுந்துள்ளனர் ராமநாத புரம் மக்கள்.

இராமநாதபுரம் அருள்மிகு ஸ்ரீ முத்தால பரமேஸ்வரி அம்பாள் திருக்கோயில் வரலாற்றை பார்ப்போம்.

காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்து வெளிப் பட்டணத்தில் குடி புகுந்த மக்கள் முதலில் தங்கள்





# கும்பத்தில் குடி கொண்ட முத்தாலம்மன்

வழிபாட்டுக்கென ஒரு விநாயகர் ஆலயம் கட்டினர் அந்த கணபதிக்கு தர்ம தாவள விநாயகர் என்று பெயர் வைத்து வழிபட்டு வந்தனர். அக்காலத்தில் இக்கோயிலுக்குள் குருகுலம் ஒன்றும் செயல்பட்டு வந்துள்ளது அதில் பயின்ற மாணவர்கள் ஓய்வு நேரத்தில் விளையாட்டாக கரகம் எடுத்து ஆடுவதும் வேப்பிலையை வைத்துக்கொண்டு விளையாடுவதுமாக இருந்திருக்கிறார்கள்.

ஒரு நாள் இரவில் அவர்கள் கனவில் ஆதிபராசக்தி தோன்றி, குழந்தைகளே! நீங்கள் ஆடிப்பாடி எடுத்தாடும் இந்த கரகத்தில் முத்தாலம்மன் என்ற பெயரோடு நான் எழுந்தருளியுள்ளேன் என்னை வழிபடுங்கள் உங்கள் குலத்தையும் ஊர் மக்களையும் காக்கும் தெய்வமாக இருந்து வருகிறேன் என்று அசரீரியாக கூறினாள்.

அதைத் தொடர்ந்து ஒரு சிவராத்திரி நன்னாளில் முத்தாலம்மன் குடி கொண்ட கரகத்தை எடுத்துச் சென்று தர்மாவள விநாயகர் கோவிலுக்கு முன்பு நிலை நிறுத்தி குலதெய்வமாக போற்றி வணங்கி வந்தனர். கும்பத்தின் மீதுள்ள மஞ்சனையாக அம்பாள் இருப்பதால் அம்பாளை ஓவியமாக வரைந்து அந்தப் படத்தை சில காலம் பூஜை செய்து வழிபட்டு வந்தனர். பின்னர் ஐம்பொன் உற்சவ விக்கிரகத்தை அமைத்து விழா எடுத்து கொண்டாடி வழிபட்டனர்.

அதன் பின்னரே முத்தாலம்மன் மூலவர் கற்சிலை வடிவத்தில் உருவாக்கி பிரதிஷ்டை செய்து மூலஸ்தான அம்பாள் பீடத்தில் ஸ்ரீ சக்கர பிரதிஷ்டையும் செய்து வழிபாடுகள் நடத்தி வந்துள்ளனர் அன்னை அருள்மிகு ஸ்ரீ முத்தாலம்மன் புன்னகை தவழும் மலர்ந்த முகத்துடனும் நான்கு திருக்கரங்களுடனும் சூலம், உடுக்கை ,பாசம், கபாலம் ஏந்தியவளாக மாரியம்மனின் வடிவில் அமர்ந்து, வேண்டுவோரின் வேண்டுதலை நிறைவேற்றும் வரப்பிரசாதியாகவும், சக்தி மிக்கவளாகவும், கண்கண்ட தெய்வமாகவும் அருள் புரிகின்றார்.

இந்த திருக்கோவிலில் பரிவார தெய்வங்களாக ஸ்ரீ வள்ளி தெய்வானை சமேத கல்யாண முருகனும் ஸ்ரீ ருக்மணி சத்யபாமா சமேத கிருஷ்ண பரமாத்மாவும் ஆஞ்சநேயர், கருடாழ்வார், சக்கரத்தாழ்வார், யோக நரசிம்மர் விஸ்வக்சேனர், மகாலட்சுமி, நாகலிங்கேஸ்வரர், நவக்கிரகம், ஷேத்திர பாலகரான ஸ்ரீ பைரவர் என அனைத்து தெய்வங்களும் அருள்பாலிக்கின்றனர்.

பிரதான தெய்வமான அருள்மிகு ஸ்ரீ முத்தால பரமேஸ்வரி அம்பாளுக்கு வருடாந்திர பிரம்மோற்சவமாக மாசி மகா சிவராத்திரி பெருவிழா நூற்றாண்டுகளாக வெகு விமரி சையாக சீரும் சிறப்புமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

அம்மனுக்கு உகந்த ஆடி மாதம் முளைக்கொட்டு திருவிழாவும், சித்திரை முதல் நாள் பூச்சொரிதல் விழாவும், நவராத்திரி விழா, விநாயகர் சதுர்த்தி விழா, கந்த சஷ்டி விழா, கிருஷ்ண ஜெயந்தி விழா, மாதம்தோறும் பௌர்ணமி பூஜைகள், சதுர்த்தி ,கார்த்திகை, அஷ்டமி பூஜைகளும் சீரும் சிறப்புமாக நடைபெற்று வருகின்றன. இத்திருக்கோவிலின் தலவிருட்சமாக வேப்பமரம் ஒன்று உள்ளது.

இராமநாதபுரம் பேருந்து நிலையத்திலிருந்து ஒரு கிலோ மீட்டர் தொலைவில் வெளிப்பட்டணம் பகுதியில் முத்தால பரமேஸ்வரி அம்பாள் திருக்கோவில் உள்ளது.

aanmeegamalar.com

ஸ்ரீ நாச்சாயி அம்மன் துணை, ஸ்ரீ தர்ம சாஸ்தா துணை

வாசுதேவா என்றால்
வளம் பொங்கும்!
வாசுதேவன் பாத்திரத்தில்
ராசி பொங்கும்!!





# வாசுதேவன் பாத்திரக்கடை

முகவையின் மபெரும்
பாத்திரக்கடை



கல்யாண சீர்வரிசைக்கு தேவையான
பாத்திரங்கள், கிரைண்டர், மிக்ஸி, குக்கர்,
கேஸ் ஸ்டவ் மற்றும் அனைத்தும்
வாங்க கைராசியான நிறுவனம்

12,பி.கே.சாமி தெரு, இராமநாதபுரம்

போன்: 04567220 209, செல்: 88074 08807

aanmeegamalar.com

aanmeegamalar.com



# குங்கும அர்ச்சனை செய்தால் திருமணம் கைகூடவைக்கும் திரிபுரசுந்தரி சமேத பார்கேஸ்வர்






திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் அருகே அகரம்சேரி கிராமத்தில் அமைந்துள்ளது திரிபுரசுந்தரி அம்மன் சமேத பார்கேஸ்வர் கோயில். இக்கோயில் சுமார் 1,500 ஆண்டுகள் பழைமை வாய்ந்ததாகும். ஆண்டுதோறும் சிவராத்திரி நாளன்று ருத்ரம் படிக்கிறார்கள்.

சுக்கிர பகவான் சிவனை நோக்கி தவம் செய்த பிறகு திரிபுரசுந்தரி சமேத பார்கேஸ்வர் கோயில் உருவாகியிருக்கிறது.

இங்கு திருமணத்தடை நீங்க திரிபுரசுந்தரி அம்மனை 3 வெள்ளிக்கிழமைகளில் குங்குமர்ச்சனை செய்து வழிபட்டால் திருமணம் கைகூடுகிறது என்பது நம்பிக்கை.

பல்லவர்கள், சோழர்கள் போர் நடக்கும்போது சோழர்கள் போரில் வென்று கைப்பற்றப்பட்ட இடம்.

பல்லவ மகாராஜா இறந்ததைத் தொடர்ந்து அவரது நினைவாக சோழர்களால் இங்கு ஒரு கோயில் நிர்மாணிக்க எண்ணி கோயில் கட்டுகிறார்கள் சோழர்கள். கோயில் கட்டும் பொழுது அங்கு சுயம்புவாக தோன்றியிருக்கிறார் பார்கேஸ்வரர்.

**சுக்ரன் ஸ்தலம்:** சுக்கிரன் என்றால் பார்கே என்று பொருள். சுக்ரன் என்ற ரிஷி தவம் புரிந்திருக்கிறார்.

திருமணத்தடை உள்ளவர்கள் 9 வாரங்கள் வெள்ளிக்கிழமைதோறும் ராகு கால நேரத்தில் நெய்விளக்கேற்றி வழிபட்டால் விரைவில் திருமணம் நடைபெறும்.

**அம்மன் சிறப்பு:** திரிபுரசுந்தரி, இரண்டு கைகளிலும் தாமரை இதழ்களை வைத்துள்ளார். அம்மனுக்கு பால் அபிஷேகம் செய்யும்பொழுது அவரது கண்கள் சுழலும்.

பல்லவ மன்னர் சிங்கவர்மனின் 29வது ஆட்சியாண்டில் கங்க அரசர் தகடூர் பிடி மண்ணேரியின் கீழ் தன் படைகளோடு வந்து இலாட அரசரையும், மழவ அரசரையும் எதிர்த்துப் போரிட்டபோது இவருடைய சேவகரும் சிற்றரசருமாகிய மாதப் பெரு அதி அரசர் வீரமரணம் அடைந்துள்ளார். அவர் நினைவாக இந்த நடுகல் எடுக்கப்பட்டுள்ளது.

யானையின் மேல் அமர்ந்த நிலையில் வீரனும் அவர் பின்னே குடைபிடிக்கும் மற்றொரு பணியாள் சிற்பம் வடிக்கப்பட்டுள்ளது. கல்வெட்டில் வீர மரணம் அடைந்ததை குறிப்பிடும் "மாதப் பெரு அதி அரைசர்" இந்த யானையில் அமர்ந்த நிலையில் உள்ள வீரனாக இருக்கலாம்.

நடுகல்லில் ஆட்சி ஆண்டைக் குறிக்கும் வழக்கம் இருந்த போதிலும் இந்த ஆறாம் நூற்றாண்டு நடுகல்லில் மாதம், புனர்பூசம் நட்சத்திரம், என்று முதல் முதலாக குறிப்பிட்டும் வட்டெழுத்து மாறி தமிழ் எழுத்து வளர்ச்சி அடைவதை காட்டுவதாகவும், மேலும் ஒரு அரசருக்கு எடுப்பித்த உருவம் உடைய நடுகல் என்ற சிறப்பையும் பெறுகின்றது.

மேலும் தகவலுக்கு பட்டாபி குருக்கள்: 94423 00055.

கோயில் அமைவிடம்: வேலூரில் இருந்து சுமார் 25 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது அகரம்சேரி கிராமத்தில் கோவில் அமைந்துள்ளது.

# பரப்ரஹ்ம ஸ்வரூபினியான காமாட்சி

காஞ்சிபுரம் காமாட்சி அம்மன் திருக்கோவில், அன்னை லலிதா மஹா திரிபுரசுந்தரியின் முழுமை ரூபமாக காட்சி தருகிறாள். மதுரையின் மீனாட்சி, திருவாணைக்காவலின் அகிலாண்டேஸ்வரி மற்றும் காஞ்சியின் காமாட்சி இந்த மூவரும் தேவி வழிபாட்டில் மிக முக்கியமான அம்சம்.

காஞ்சி காமாட்சி அம்மன் இரு கால்களையும் மடித்து பத்மாசனத்தில் மிகவும் கம்பீரமாக அருள் தருகிறார்.

ஒரு கையில் கரும்பை வில்லெனவும், மற்றொரு கையில் தாமரை மற்றும் கிளியினையும் ஏந்தியுள்ளார். சக்தி பீடங்களாக கருதபடும் 51 முக்கிய ஸ்தலங்களில் அன்னையின் முதுகெலும்பு விழுந்த ஸ்தலம் இது என்பது குறிப்பிடத்தக்கது. காமாட்சி அம்மன் இந்த கோவிலில் "பரப்ரஹ்ம்ம ஸ்வரூபினியாக" காட்சி தருகிறார்.



காஞ்சிபுரத்தில் உள்ள அனைத்து சிவன் கோயில்களையும் மையமாகக் கொண்ட ஒரே சக்தி ஆலயம் காமாட்சி அம்மன் கோயில் ஆகும், விஸ்வப் ராஹ்மணர்களுக்கு பாத்தியப்பட்ட இந்த கோவில் பொற்கொல்லர்களின் பாரம்பரியத்தை காக்கின்ற குலதெய்வ மாக இருக்கிறது.

இது போல வேறிடங்களில் அம்ம னுக்கு தனி ஆலயங்கள் இல்லை. காமாட்சி இங்கு "பரப்ரஹ்ம ஸ்வரூபினி" என்று வணங்கப்படுகிறார்.

ஆரம்பத்தில், 'உக்ர ஸ்வரூபினி' என அழைக்கப்பட்டார். ஆதி சங்கரரால், எட்டாம் நூற்றாண்டில், இக் கோவிலில் ஸ்ரீசக்ரம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. மிகவும் உக்கிரமாக இருந்த காளியன னையை, சௌம்யமான காமாட்சியாக ஆதிசங்கரர் சாந்தப்படுத்தினார்.

“காமாட்சியின் பிரகாசமான முகத்தை தீர்கமாக தரிசிப்பவர்களுக்கு, அம்மனின் கண்கள் சிமிட்டுவது போன்றதான உணர்வினை ஏற்படுத்துமாம்”

அயோத்தியின் தசரத சக்ரவர்த்தி இத்திருக்கோவிலில் 'புத்திர காமேஷ்டி' யாகம் செய்தார். இது மார்கண்டேய புராணத்தில் உள்ள தகவல் ஆகும்.

காமாட்சியின் பிரகாசமான முகத்தை தீர்கமாக தரிசிப்பவர்களுக்கு, அம்மனின் கண்கள் சிமிட்டுவது போன்றதான உணர்வினை ஏற்படுத்துமாம்.

காமாட்சி கோவிலின் அருகே ஆதி காமாட்சி கோவில் அமைந்துள்ளது. மேலும் இது பலவிதமான பெயர்களில் அழைக்கப்படுகிறது. க்ரித்திமதி, தந்திரசூடாமணி இந்த ரூபத்தில் நான்கு கரங்களுடனும் அதில் அங்குசம், பாச, அபய மற்றும் கபாலத்தை ஏந்தியப்படி இருக்கிறாள்.


திருக்கல்வனூர் திவ்ய தேசம் காமாட்சி அம்மனின் கருவறைக்கு அருகில், 10ஆம் நூற்றாண்டின் ஆழ்வாரால் மகிமைப்படுத்தப்பட்ட விஷ்ணுவுக்கு அர்ப்பணிக்கப்பட்ட கோயில் இருந்தது. இக்கோயில் சிதிலமடைந்ததால் அங் குள்ள தெய்வம் இப்போது காமாட்சி அம்மன் கோவிலுக்குள் வைக்கப்பட்டுள்ளது.

இந்த கோவிலில் நான்கு கால பூஜை நடைபெறுகிறது. இங்கு நிகழும் தேர் திருவிழாவும், தெப்ப திரு விழாவும் மிகவும் பிரசித்தி பெற்றது.

ஆடி பூரம், சங்கர ஜெயந்தி, வசந்த உற்சவம் ஆகியவை மிகவும் கோலாகலமாக கொண்டாடப்படுகிறது. வெள்ளிக்கிழமைகள் மிகவும் பிரசித்தி பெற்றது. நான்கு திசைகளிலும் மடங்களை நிறுவிய பின் ஆதி சங்கரர் காஞ்சி வந்தார். இங்கே காமகோடி பீடத்தை நிறுவி காமாட்சியுடன் ஐக்கியமானார்.

காயத்ரி ஆவண தயாரிப்பு மையம்
ந.சிவராமகிருஷ்ணன்
பத்திர எழுத்தர்
அரசு உரிமம் எண்
A437/ TRP/1993
Cell : 98422 57449 / 99947 82295
7/22, கருணாநிதி நகர், சௌரிபாளையம், கோயமுத்தூர் - 641 028

aanmeegamalar.com


# புற்றாக தோன்றிய மாரியம்மன்

சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் இருந்து சிவகங்கை செல்லும் வழியில் உள்ள காட்டு உடைகுளத்தில் ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் உள்ளது. இக்கோவிலில் பங்குனி பத்துநாட்கள் நடைபெறும்.

விழாவில் ஏராளமான பக்தர்கள் தீமிதித்து நேர்த்தி கடன் செலுத்தி வழிபடுவார்கள். இக்கோவிலில் உள்ள மரத்தில் பல ஆண்டு காலமாக அம்மன் மற்றும் விநாயகர் முகத்துடன் மாரியம்மன் காட்சிதருவதாக பக்த்தர்களால் வணங்கப்பட்டுவருகிறது. இங்கு நடைபெறும் ராகுகால பூஜைகள் கலந்து கொண்டு வேண்டிசெல்கின்றனர்.

புற்றுகோவிலை வழிபடவரும் போது முட்டைகள் வைத்து வழிபடுகின்றனர் பின்முட்டைகள் காகத்திற்கு உணவாக வழங்கப்படுகிறது. நாகர் புற்றுஅம்மனை வழிபட்டு நோய்கள் குணமாகியதாக கோவில் பரம்பரை பூசாரி சுப்பிரமணியன் கூறினார். மேலும் பயத்தால் பாதிப்படைந்தவர்களுக்கும் அம்மைநோயால் பாதிப்பு அடைந்தவர்களுக்கும் மஞ்சள் தீர்த்தம் வழங்கபடுகிறது.


D.தனபாலன்

பத்திர எழுத்தாளர்

9842409829/9791944001



பத்திரம் சம்பந்தப்பட்ட அனைத்தும் சிறந்த முறையில் செய்துதரப்படும்

மேற்கு ரதவீதி, அண்ணாசிலை அருகில், மானாமதுரை 630 606






அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் புற்று திருகோவிலுக்கு வருகை தரும் பக்தர்களை அன்புடன் அழைக்கிறோம்

காட்டுஉடைகுளம்

அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் புற்று திருக்கோவில்

கோவில் டிரஸ்ட்டி

S.P.சுப்பிரமணியன்

S.P. நாகராஜன் S.P. முருகன்

தயாபுரம் பஸ்ஸ்டாப் மானாமதுரை

aanmeegamalar.com aanmeegamalar.com aanmeegamalar.com aanmeegamalar.com aanmeegamalar.com

Bharatgas
Bharat Petroleum
COOK FOOD. SERVE LOVE

எங்களுக்கு தொடர்ந்து ஆதரவு அளித்து வரும் திருப்புவனத்தை சுற்றியுள்ள 95 கிராம பொதுமக்களுக்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

# அருண் ஏஜன்ஸீஸ்

## பாரத் கேஸ் டிஸ்ட்ரிபியூட்டர்ஸ்

MAK LUBRICANTS

டீலர் : MAK லூப்ரிகேண்ட்ஸ் சிவகங்கை மாவட்டம்.

Emergency No : 9443274648

1/86A, பூவந்தி மெயின் ரோடு, திருப்புவனம், சிவகங்கை மாவட்டம்.

போன் : 04574-264300, 265710

குறிப்பு : எங்களின் கிளை நிறுவனமாக செயல்படும் வாட்டர் சர்வீஸில், லிப்ட் வசதியில் டூவீலர், கார், காலை முதல் மாலை வரை சிறப்பாக வாட்டர் சர்வீஸ் செய்யப்படும்.



அருள்மிகு தாயமங்கலம் முத்துமாரியம்மன் திருவிழாவினை காண வரும் பக்தர்களை அன்புடன் அழைக்கிறோம்!

# A.L.S.ராமையாநாடார் - சன்ஸ்

மரம், ஓடு, சிமிண்ட், உரம் வியாபாராம்

236, மெயின்ரோடு, மானாமதுரை

# ஸ்ரீ அருணாட்சி அம்மன் பிரிக்ஸ்

உயர்தர சேம்பர் செங்கல் தயாரிப்பாளர்கள்

செல்: 99946 75130, 94431 68202, 98424 68202, 04574269905



S.நாகராஜ்
தலைவர்,
வீர அழகர் சாரிடபிள் டிரஸ்ட்



S.ராஜேந்திரன்

# நின்ற கோலத்தில் அருள்புரியும்

# தாயமங்கலம் முத்துமாரிஅம்மன்

தமிழ்நாட்டின் சிவகங்கை மாவட்டத்தில் உள்ள இளையாங்குடி வட்டாரத்தில் அமைந்துள்ள ஒரு கிராமம் தாயமங்கலம் ஆகும்.

சிவகங்கை மாவட்டம் இளையான் குடியில் இருந்து 11 கிமீ தொலைவிலும், மானாமதுரையில் இருந்து 30 கிமீ தொலைவிலும், சிவகங்கையில் இருந்து 32 கிமீ தொலைவிலும், காளை யார்கோவிலில் இருந்து 18 கிமீ தொலைவிலும், ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில்இருந்து 22 கிமீ தொலைவிலும், மதுரையில் இருந்து 88 கிமீ தொலைவிலும் உள்ளது தாயமங்கலம் முத்துமாரியம்மன் கோயில்.

இத்திருக்கோவிலில் வீற்றிருக்கும் அம்மன் பல்வேறு சிறப்புகளைப் பெற்றுள்ளார். இத்தலத்து அம்மன் சிறுமி வடிவத்தில் வணங்கப் பட்டு வருகிறார். இக்கோவிலில் வருடா வருடம் தமிழ் மாதம் பங்குனி மாதத்தில் 10 நாட்கள் மிக விமரிசையாக திருவிழா நடைபெறும்.

இந்த 10 நாட்கள் கொண்ட திருவிழாவில் தேரோட்டம் மிகவும் சிறப்பான வைபவம் ஆகும்.இத் திருக்கோவிலின் அமைப்புப்படி, கிழக்கு திசையில் அம்மனின் பார்வை பட, கொடிமரம் எதிர் அமைத்து, வடபுறம் தெப்பக்குளம் உரு வாக்கி 1914ல் கட்டப்பட்டுள்ளது.

இந்த கோவிலில் முத்துமாரியம்மன் வீற்றிருக்க, அருகே விநாயகர், முருகன் மற்றும் சோனையா உள்ளிட்ட இஷ்ட தெய்வங் கள் காட்சியளிக்கின்றனர். இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் இத் திருக்கோவில் உள்ளது.

கன்னித் தெய்வமாக இருந்து சுற்று வட் டாரத்தில் 22 கிராம மக்களுக்கும், தாயாகவும், மாங்கல்ய பாக்கியம் எனும் மங்கல வரம் அருளும் நாயகியாகவும் இருந்து அம்மன் அருள்பாலிக்கும் ஊர் என்பதால், 'தாய்மங்கலம்' என இவ்வூர் அழைக்கப்பட்டதாம். அதுவே, பின்னர் தாய மங்கலமாக மருவியது என்கிறார்கள்.

கன்னித் தெய்வமாய் கோயில் கொண்டிருக் கிறாள், ஸ்ரீமுத்துமாரியம்மன். இத்தெய்வம் கன்னித்தெய்வமாக இருப்பதால் திருமண வரம் வேண்டுவோர், தாலிப்பொட்டினை அம்மன் காலடி யில் சமர்ப்பித்து வழிபடுவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

இத்தலத்து வரலாற்றுப்படி, பல ஆண்டுகளுக்கு முன்பு, இப்பகுதியைச் சேர்ந்த வணிகர்கள் தங்கள் பகுதியில் விளையும் பொருட்களை விற்பனை செய்வதற்காக, அடிக்கடி மதுரைக்குச் சென்று வருவது வழக்கம். இந்த கிராமத்தைச் சேர்ந்த முத்துச் செட்டியார், இவர் மீனாட்சியம்மன் மீது அதீத பக்தி கொண்டவர். மதுரைக்கு வியாபார நிமித்தமாக செல்லும்போதெல்லாம் மீனாட்சியையும், சொக்கநாதரையும் தவறாமல் வழிபட்டு வருபவர், அப்படி ஒரு நாள் மீனாட்சியம்மனிடம், தனக்கு குழந்தை இல்லாததை எண்ணி மனமுருகி வேண்டி மதுரையில் இருந்து ஊர் திரும்பிக் கொண்டிருந்தார். வழியில், சிறுமி ஒருத்தி பாதை தெரியாமல் அழுது கொண்டிருந்ததை கண்டார். அந்தச் சிறுமியை விசாரித்தபோது, தனது பெயர் முத்துமாரி என்றும், தனது தாய் தந்தையிடமிருந்து பிரிந்து விட்டேன் என்றும் எங்கு போவதென வழிதெரிய வில்லை என்றும் கூறி தேம்பினாள்.

"கவலைப்படாதே அம்மா! உன்னை நான் பத்திரமாகப் பார்த்துக்கொள்கின் றேன்" எனக் கூறி அந்தச் சிறுமியை தன்னுடன் அழைத் துப் போனார். மதுரை மீனாட்சியே இந்தக்குழந் தையை தனக்குத் தந்ததாக எண்ணினார். ஆனால், அவரது சந்தோஷம் நீண்ட நேரம் நிலைக்கவில்லை.

செல்லும் வழியில் அங்குள்ள குளத்தின் அருகில். பயணக்களைப்பாக இருந்ததால், சிறுமியை கரையில் உட்கார வைத்துவிட்டு குளத்தில் இறங்கி குளிக்கப் போனார். ஆனால், குளித்து முடித்துவிட்டு கரைக்கு வந்து பார்த்தால், குழந்தையைக் காணவில்லை. இதனால் மனம் வெறுத்துப்போன முத்துச் செட்டியார் தன் மனைவியிடம் நடந்ததையெல்லாம் கூறிவருந்தினார். இரவு உணவைகூட சாப்பிடாமல், படுக்கப் போனவர் அப்படியே கண்ணயர்ந்து விட்டார்.

அவரது கனவில், 'சிறுமியாக வந்தது நான்தான் என்றும் ஊருக்கு அருகாமை யிலிருக்கும் கள்ளிக்காட்டில், நான்உறைய இருக்கிறேன் என்றும் கோயில் கட்டி வழிபடுபவர்களுக்கு, வேண்டும் வரங்களை அருளுவேன் என்றும் கூறி மறைந்தாள் முத்துமாரி. படுக்கையில் இருந்துஎழுந்த வியாபாரி, தன் மனைவியிடம் எல்லாவற்றையும் கூறினார்.

மறுநாள் பொழுது விடிந்ததும் முதல் வேலை யாக ஆற்று மணலில் அம்மன் சிலையை அமைத்து வழிபடத்தொடங்கினார். இவரைத் தொடர்ந்து ஊர் மக்களும் வழிபட்டனர். நாளடை வில் அந்தப் பகுதி மக்களின் கண்கண்ட தெய்வமானாள் முத்து மாரியம்மன்.

அம்மை நோயினால் பாதிக் கப்பட்ட வர்கள், செவ்வாய் வெள்ளி, ஞாயிற் றுக்கிழமைகளில் கோயிலுக்கு வந்து வணங்கி இங்கிருந்து தீர்த்தம் பெற்றுச்சென்றால் நோய் குணமாகும்







என்பது இங்குள்ள மக்களின் நம்பிக்கையாக இருக்கிறது. இதுதவிர திருமண வரம், குழந்தை பாக்கியம் வேண்டியும் ஏராளமான பக்தர்கள் வருவதையும், பிரார்த்தனை நிறைவேறி நேர்த்திக்கடன் செலுத்து பவர்களையும் இங்கு காணலாம். மாவிளக்கு எடுத்தல், கரும்பு தொட்டிலில் குழந்தையை சுமந்து வருதல், கண்மலர் காணிக்கையாக்குதல் என பல்வேறு நேர்த்தி கடன்களை பயபக்தியுடன் செய்வர்.

ஆயிரக்கணக்கான பக்தர்கள் மாவிளக்கு எடுத்தும் தீச்சட்டி, பால்காவடி, சிலா குத்தல், வேல், அலகு குத்துதல், கரும்புத் தொட்டில், ஆயிரம் கண் பானை எடுத்தும் அம்மனுக்கு நேர்த்திக்கடன் செலுத்துகின்றனர். விழா காலங் களைத் தவிர மற்ற நாட்களில் தினசரி பூஜைகள், அன்னதானம் நடைபெறுகிறது. கண் நோய் உள்ளவர்களுக்கு இங்கு அம்மன் சன்னதியில் அபிஷேக தீர்த்தம் கொடுக்கின்றனர்.

கண்பிரச்சினை தீர்ந்தவுடன் கண்மலர் செலுத்தியோ அல்லது அங் கப்பிரதட்சனை செய்தோ தங்களின் நேர்த்திக்கடனை செலுத்து கின்றனர்.

திருவிழாவை தொடர்ந்து பக்தர்கள் வசதிக் காக, மதுரை, கமுதி, காளையார்கோவில், பார்த்தி பனூர், இளையான்குடி, அருப்புக்கோட்டை ஆகிய ஊர்களிலிருந்து சிறப்பு பேருந்து தாயமங்க லத்திற்கு இயக்கப்பட்டு வருகிறது.




அருள்மிகு தாயமங்கலம் முத்துமாரியம்மன் கோவில்
பங்குனி பெருந்திருவிழா காண வருகை தரும்
பக்தர்களே வருக! வருக!! வருக!!!

நம்பிக்கை! நாணயம்!! கைராசி!!!
S.ஹரிதாஸ் ஆச்சாரி & சன்ஸ்



H.P.K.ஜுவல்லர்ஸ்
ஆபரணத் தொழிலகம்



916 KDM சிறந்த முறையில்
ஆர்டரின் பேரில் செய்து தரப்படும்

5/98-C, இராஜாஜிதெரு,
ஸ்ரீமுத்தாலம்மன் கோவில் எதிர்புறம்,
பரமக்குடி

செல்: 9965761766 / 9994726380 / 9865550779


aanmeegamalar.com

# 2000 ஆண்டு பழமையான பிள்ளைவயல் காளி

சிவகங்கை சீமை பெண்ணின் பெருமை போற்றும் மாவட்டம். சிவகங்கை சீமை என்றாலே வீர மங்கை வேலு நாச்சியார் என்ற பெருமையும் உண்டு .

இங்கு காவல் தெய்வமாக அமைந்திருக்கும் பிள்ளை வரம் தரும் பிள்ளை வயல் காளியம்மன் திருக்கோயில் சுமார் 2000 ஆண்டு பழமை வாய்ந்தது. நவாப் காலத்தில் கிணறு தோண்டும் போது தோன்றிய சிலை தான் இன்று இவ்வுரு மக்கள் தங்களின் காவல் தெய்வமாக வணங்குகின்றனர்.

பிள்ளை வயல் காளியம்மன் கோவில் செவ்வாய் வெள்ளி மட்டுமின்றி தினமும் ஏராளமான பக்தர்கள் இங்கு வந்து செல்கின்றனர். குறிப்பாக பிள்ளை வரம் வேண்டி ஏராளமான பெண்கள் வந்து அங்குள்ள மரத்தில் தொட்டில் கட்டி குழந்தை வரம் கேட்பார்கள்.

அம்மனும் அவர்கள் கோரிக்கையை குறித்த காலத்தில் நிறைவேற்றி வைப்பார். எனவே அனைவராலும் பிள்ளை வரம் தரும் காளி என்று



அழைக்கப்படுகிறார். மேலும் தொழில் சிறக்க வேண்டுவோரும் புதிய தொழில் துவங்குவோரும் அம்மனிடம் வேண்டுதல் செய்து தொழில் தொடங்குவர். இது போன்று பக்தர்களின் வேண்டுதலை நிறைவேற்றுவதால் வேண்டும் வரம் தரும் காளியம்மன் என்றும் அழைக்கப்படுகிறார்.

பூச்சொரிதல் விழாவானது கடந்த 62 வருடங்களாக ஆண்டு தோறும் ஆனி மாதம் நடப்பதுண்டு. விழாவில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வந்து அம்மனை தரிசிப்பர்.

வீட்டிற்கு வீடு புத்தாடை அணிந்து பூத்தட்டுடன் கோவிலுக்கு செல்வது கண் கொள்ளாக் காட்சியாகும். மேலும் பெண்கள் பொங்கல் வைத்தல், மாவிளக்கு எடுத்தல், கரும்பு தொட்டில் சுமத்தல், பூக்குழி இறங்குதல் போன்ற நேர்த்தி கடன்களை செலுத்துவர்.

ஆனி பிறந்தாலே சிவகங்கை நகர் விழாகோலம் பூண்டு விடும். ஒவ்வொரு வீட்டினரும் விழாவிற்காக


மக்களின் பேரதரவுடன் சரித்திரம் வாய்ந்த
சிவகங்கையில் மீண்டும் புதுபொழிவுடன்
ஞாயிற்றுக்கிழமை வாரம் ஒருமுறை
இப்போது சிவகங்கை சிவன் கோவில் அருகில்
நிரஞ்சன் தோல் கிளினிக்

என்றென்றும் மருத்துவ சேவையில்
மக்களின் மருத்துவர்
Dr.அமலா ராஜமுருகன் MD.(DVL)
தோல்நோய் மற்றும் அழகியல்
சிகிச்சை நிபுணர், உதவி பேராசிரியர்,
மருத்துவ கல்லூரி

அளிக்கப்படும் சிகிச்சை விபரம்

தோல் சம்மந்தமான நோய்கள்
- தீராத நீண்ட நாள்பட்ட சொறி, சிரங்கு, புண், தோல் அரிப்பு, கரப்பான்.
- அனைத்து வகையான படர் தாமரை மற்றும் வெண்தேமல்.
- முகப்பருக்களுக்கு மற்றும் சோரியாசிஸ் நோய்க்கு சிறப்பான சிகிச்சை.
- சூரிய ஒளியினால் தோலில் உண்டாகும் வியாதிகள் (Photo damaged Skin).
- வெண்குஷ்டம் மற்றும் வெண்புள்ளி கண்டறிந்து சிறப்பான சிகிச்சை.
- சர்க்கரை வியாதி சம்பந்தமான தோல் வியாதிகள்.
- கால்களில் பித்த வெடிப்புகள் மற்றும் சத்து குறைபாடுகளால் ஏற்படும் தோல் நோய்கள்.
- கால் ஆணி, கால் சதை (Callosity) தடிப்பு உயர்தர சிகிச்சை.

அழகு சம்மந்தமான சிகிச்சைகள் விபரம்
- அனைத்து வகையான தழும்புகள் சரிசெய்தல் (முகப்பரு, வெட்டுக்காயம், ஆப்ரேசன் தழும்பு).
- கை மற்றும் கால்களில் உள்ள மரு மற்றும் ஆணி கால்களுக்கு ஐஸ் சிகிச்சை (Cryosurgery).
- ஆண், பெண் இருபாலருக்கும் முகத்தில் உள்ள மங்கு அகற்றுதல் (Chemical Peeling).
- முகம் மற்றும் உடம்பில் உள்ள மரு மற்றும் கரும்புள்ளிகளை அகற்றுதல் (Electro Surgery).
- முகப்பரு தழும்பு, முடி வளர்ச்சி, நாள்பட்ட புண் ஆகியவற்றிக்கு சிகிச்சை (PRP) மூலம் நிவாரணம்.

தலைமுடி சம்மந்தமான நோய்கள்
- நீண்ட நாள்பட்ட பொடுகு, பேன் தொல்லை, தலைமுடி உதிர்தல். ஆண், பெண் இருபாலருக்கும் சிறப்பான சிகிச்சை.
- தலைமுடி வழுக்கை, ஆண், பெண் (Androgenic alopecia).
- பூச்சி வெட்டு (Alopecia areata) மற்றும் இளநரை (Premature Canities).
- தலையில் சோரியாசிஸ் போன்ற வியாதிகள்.

நகம் சம்மந்தமான நோய்கள்
- நகச்சொத்தை & நகம் உள்நோக்கி வளர்தல், பாக்டீரியா மற்றும் பூஞ்சைகளால் ஏற்படும் பல்வேறு நோய்கள்.
- அனைத்து வகையான பால்வினை சம்பந்தப்பட்ட நோய்கள்.

பார்வை நேரம்: ஞாயிற்றுக்கிழமை
காலை 8.30 மணிமுதல் மாலை 6.00 மணிவரை
(வாரம் ஒருமுறை)

அன்பையும் ஆதரவையும் என்றென்றும் நாடும்
நிரஞ்சன் தோல் கிளினிக்
சிவன் கோவில் தெற்கு தெரு,
அழகப்பா பல்கலைக் கழகம், (மேல்மாடி) சிவகங்கை.
தொடர்பு அலைபேசி : 95853 36998

உறவினர்களை அழைப்பதுண்டு. நகரை காவல் காக்கும் தெய்வமாக காளியம்மன் விளங்குகிறார். வயல் காடாக இப்பகுதி இருந்ததால் பிள்ளை வயல் காளியம்மன் என்றழைக்கப்படுகிறது.

முன்பு விவசாய நிலங்களில் கிணறு தோண்டும் பழக்கம் இருந்தது. இங்கு ஒரு குழுவினர் கிணறு தோண்டினர். ஒரு இடத்தில் தோண்டும் போது ரத்தம் பீறிட்டு வந்தது. விவசாயிகள் அதிர்ச்சி அடைந்தனர்.

அந்த நிலத்தில் அம்மன் சிலை கிடைத்தது. அதை தொடர்ந்து சப்த கன்னியர் சிலையும் தோன்றியது. அச்சிலைகளை பிரதிஷ்டை செய்து வழிப்பட்டனர். இந்து அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது.

உலகில் காளியம்மன் கோவில் உடன் சப்த கன்னியர்கள் இருக்கும் ஒரே காளி கோவில் என்ற பெருமையை வாய்ந்தது. காளியம்மன் எப்போதும் தன் மீது வெயில் மழை படுமாறும் தான் அமைந்திருக்கும்.

அப்படி தன்மீது கூரை அமைந்து மழை, வெயிலினை தடுத்தால் தன் சக்தியை கொண்டு கூரையை தூக்கி எரிந்து விடுவதாக ஐதீகம். ஆடி மாதம் வெள்ளி கிழமைகளிலும் மார்கழி மாதமும் அம்மன் மடியில் குழந்தை இருப்பது போல் அலங்காரம் செய்து அம்மனுக்கு சிறப்பு பூஜைகள் செய்து வழிபடுகின்றனர். இப்பூஜை செய்யும் போது குழந்தை இல்லாதவர்கள் வந்து அம்மனை சரித்து செல்கின்றனர்.

இருப்பிடம்: சிவகங்கை மாவட்டம் பஸ் நிலையத்திலிருந்து அரை கி.மி தூரத்தில் உள்ளது பிள்ளை வயல் காளியம்மன் கோவில் உள்ளது.






# குழந்தை வந்து பக்தர்களின் குறைகளை தீர்க்கும் தாயமங்கலம் முத்துமாரியம்மன்

சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் இருந்து 18 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது தாயமங்கலம் 'கிராமம் முன்னொரு காலத்தில் இந்த ஊரை சேர்ந்த முத்து செட்டியார் என்ற வாணிபர் தினமும் மதுரை சென்று வாணிபம் செய்து விட்டு ஊர்திரும்புவார். அப்போது தினமும் மீனாட்சி அம்மனை வணங்கிவிட்டு தான் ஊர் திரும்புவார்.





குழந்தை இல்லாத அவர் மதுரை மீனாட்சியிடம் மனம் உருகி வேண்டினார். ஒரு நாள் ஊர்திரும்பும் போது வழியில் இருந்த ஊரணியில் நீர் அருந்தி காட்டுவழியில் நடத்து வந்தார். அப்போது அழகியபெண் குழந்தை அழுது கொண்டிருந்தது. குழந்தை இல்லாத நமக்கு மீனாட்சி குழந்தையாக வந்துள்ளாள் என குழந்தையை தூக்கி தோளில் சுமந்து கொண்டு தாயமங்கலம் கண்மாய் வழியாக வணிகர் வந்தார். அப்போது திடீர் என குழந்தை மாயமாய் மறைந்து விட்டது.

குழந்தையை பல இடங் களில் தேடினார். எங்கும் குழந்தையை கானவில் வில்லை. வீடு திரும்பிய அவர் தன் மனைவியிடம் குழந்தை கிடைத்த விவரத்தை தெரி வித்து, பின் குழந்தை மாயமானது குறித்தும் கூறினார். அன்று இரவு முத்துசெட்டியார் வணி கரிடம் கனவில் மீண்டும் அந்த குழந்தை தோன்றி தான் கத்தாளங்காட்டில் தங்கி இருப்பதாவும் அங்கு எனக்கு கோவில் கட்ட வேண்டும், எனவும், கூறி மறைந்துவிட்டது.

அதை தொடர்ந்து அவர் அதிகாலை எழுந்து ஊர் பிரமுகர்களுடன் சென்றார். அங்கு கனவில் கூறிய இடத்தில் குழந்தை நடத்த பாதம் அடையாளம் தெரிந்தது. பின் பிடிமண் எடுத்து குடிசையில் முதலில் கோவில் அமைத்து குழத் தை உருமாறி வந்ததால்" முத்து மாரி என அழைத்தனர். அதனை தொடந்து வறட்சியான பகுதிகள் செழித்தது. முத்துமாரிக்கு 1914ம் ஆண்டு கருங்கல்லில் திருஉருவ சிலை அமைக்கப்பட்டு கோவில் கட்டப்பட்டது. குழந்தை பாக்கியம், நோய் நொடிகள், தீராத அம்மை போன்ற நோய்களை அம் மன் குணமடைய செய்து வருகிறாள்.இன்றும் பக்தர்கள் கனவில் குழந்தையாக தோன்றி குறைகளை தீர்ப்பதால் ஏராளமான பக்தர்கள் தீசட்டி எடுத்து ஆடிவந்து தரிசனம் செய்துவருகின்றனர்.

ஆண்டுதோறும் பங்குனி மாதம் நடைபெறும் 10 நாள் திருவிழா சிறப்பு வாய்ந்தது ஆகும். நவராத்திரி, விழாவும் 10 நாட்கள் நடத்தப்படுகிறது. மதுரையில் இருந்து தாய மங்கலத்திற்கு நேரடி பஸ் வசதியுள்ளது.







# தாயமங்கலம் அம்மன் இருக்கும் திசைநோக்கி வீட்டுவாசலில் பொங்கல் வைக்கும் பக்தர்கள்

மதுரை மீனாட்சி அம்மன் தன் தீவிர பக்தர்க்கு குழந்தையாக காட்சிகொடுத்த இடம் மீனாட்சியே உருமாறி காட்சி தந்ததால் மாரியம்மன் திருப்பெயரால் கோவில் எழுப்பபட்டது.

இங்கு வரும் பக்தர்களால் தமிழகத்தில் அரசுபோக்குவரத்து கழகத்திற்கு அதிக வருவாய் ஏற்படுத்தி கொடுத்த கோவில் தாயமங்கலம் ஆகும்.

கடும் கோடைவெயிலின்போது இங்கு நடைபெறும் பங்குனி திருவிழா கொடியேற்றத்தின்போது இரவில் மழையும், பொங்கல் விழாவின் போது பகலில் மழையும் பெய்யும் இது ஆன்மிக அதிசயமாக பக்தர்கள் கருதுகின்றனர்.

மதுரை சிவகங்கை, ராமநாதபுரம் மாவட்டங்களில்பங்குனி பொங்கல் விழாநாளில் தங்கள் வீட்டுக்கு முன்பு தாயமங்கலம் முத்துமாரியம்மன் இருக்கும் திசைநோக்கி பொங்கல் வைத்து வழிபாடு செய்வது இன்றும் வழக்கத்தில் உள்ளது. திருவிழா காலம் மட்டும்மின்றி ஆண்டு முழுவதும் பக்தர்கள் கோவில் வந்து நேர்த்தி கடனை செலுத்தி வருகின்றனர்.


தாயமங்கலம் அருள்மிகு முத்துமாரியம்மன் திருவிழா காண வருகை தரும் பக்தர்களே வருக வருக



கண்ணுச்சாமி தேவர் காம்ப்ளக்ஸ்

உரிமையாளர் கே.குமரேசன்



மஹால், A/C. Non A/C ரூம், வீடு வாடகைக்கு கிடைக்கும்

Ph: 9860844645 / 8208034865 தாயமங்கலம்

அருள்மிகு தாயமங்கலம் அருள்மிகு முத்துமாரியம்மன் கோவிலுக்கு வருகை தரும் பக்தர்களை அன்புடன் அழைக்கிறோம்



ஸ்ரீ மாரீஸ் ஸ்டோர் தயாநகர், மானாமதுரை

ஸ்ரீ மாரீஸ் ரியல் எஸ்டேட் தயாநகர், மானாமதுரை

ஸ்ரீ மாரீஸ் வெல்டிங், கொன்னக்குளம், மானாமதுரை

A.சுரேஷ்குமார் 9751612979


A.பூமிநாதன் 8122522570

A.S.கமலேஸ்வரன் 9080075007









# தீராத நோய்களை தீர்க்கும் தாயமங்கலம் முத்துமாரிஅம்மன்

தமிழ்நாட்டின் சிவகங்கை மாவட்டத்தில் உள்ள இளையாங்குடி வட்டாரத்தில் அமைந்துள்ள ஒரு கிராமம் தாயமங்கலம் ஆகும்.

மதுரையில் இருந்து 88 கிமீ தொலைவில் உள்ள தாயமங்கலம் முத்துமாரியம்மன் கோவில் இத்திருக் கோவிலில் வீற்றிருக்கும் அம்மன் பல்வேறு சிறப்புகளைப் பெற்றுள்ளார்.

இத்தலத்து அம்மன் குழந்தை வடிவில் தோன்றி அன்னை மீனாட்சியாகவே நின்றகோலத்தில் பக்தர்களுக்கு காட்சிதருகிறார்.

ஆண்டு தோறும்தமிழ் மாதம் பங்குனி மாதத்தில் 10 நாட்கள் மிக விமரிசையாக திருவிழா நடைபெறகிறது.

இத்திருக்கோவிலின் அமைப்புப்படி, கிழக்கு திசையில் அம்மனின் பார்வை பட, கொடிமரம் எதிர் அமைத்து, வடபுறம் தெப்பக்குளம் உரு வாக்கி தீர்த்தகுளமாககருதபடுகிறது. இங்கு வருபவர்கள் முதலில் குளத்தில் நீராடி பின் தீசட்டி, அங்கபிரதட்சனம், பால்குடம், கரும்பு தொட்டில் எடுத்து நேர்த்தி கடன்செலுத்துவார்கள்.



ஆண்டு தோறும் பொங்கல் விழாவின்போதுமட்டும் இரண்டு நாட்கள் பக்தர்கள் 24 மணிநேரமும் தரிசனம்செய்யலாம்.

பிறநாட்களில் காலை7 மணிமுதல் இரவும்7 மணிவரை பக்தர்கள் அனுமதிக்க படுகின்றனர். தீராத நோய்களையும் பக்தர்கள் கனவில் தோன்றி என்னை நாடிவா என அம்மன் கூப்பிட்டதாகவும் அம்மனின் அருள் பெற்ற பக்தர்கள் பலர் இன்றும் தெரிவிக்கின்றனர்.

இதற்காக ஆதாரமாக திருவிழா காலத்தில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் தீச்சட்டி ஏந்தி கோவிலை வலம் வருவதை இப்போதும் காணலாம்.

தீர்த்தகுளம் என்பதால் திருவிழாவின் போது குளம் தூர்வாரி சீரமைக்கப்பட்டு தண்ணீர் நிரப்படுவதாக கோவில் அறங்காவலர் வெங்கடேசன் செட்டியார் தெரிவித்தார்.

பக்தர்கள் எந்த குறையும்இன்றி மனமகிழ்ச்சியுடன் சுவாமி தரிசிக்க சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளது.

தற்போது ராஜகோபுரம் கும்பாபிஷேக திருப்பணி நடைபெற்றுவருகிறது.

# தாயமங்கலம் அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில்



## பங்குனி பெருந்திருவிழா

**திருவிழா காண வரும் பக்த கோடி பெருமக்களே வருக! வருக!!**
**தாயமங்கலம் ஸ்ரீ முத்துமாரியம்மன் அருள் பெறுக!**

| | |
|---|---|
| 28.03.2024 வியாழக்கிழமை | காலை நவசகிதி ஹோமம், மாலை லட்சார்ச்சனை ஆரம்பம் இரவு காப்பு கட்டுதல் |
| 29.03.2024 வெள்ளிக்கிழமை | காலை லட்சார்ச்சனை |
| 4.4.2024 வியாழக்கிழமை | பொங்கல் வைபவம் |
| 5.4.2024 வெள்ளிக்கிழமை | மாலை மின்சார தீபத்துடன் தீப அலங்காரத்துடன் ரதம் |
| 6.04.2024 சனிக்கிழமை | காலை பால்குடம் இரவு புஷ்ப பல்லாக்கு |
| 7.04.2024 ஞாயிற்றுக்கிழமை | திருக்கோவில் தீர்த்தவாரி |

திருக்கோயில் ராஜகோபுரம், தங்கரதம் திருப்பணி நடைபெறுவதால் நன்கொடை வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.



திருக்கோயிலில் நடைபெறும் அன்னதானத் திட்டத்திற்கு நன்கொடை வழங்க வேண்டுகிறேன்



மதுரை, மானாமதுரை, காரைக்குடி, பரமக்குடி, இளையான்குடி, சிவகங்கை அருப்புக்கோட்டை ஆகிய ஊர்களிலிருந்து இரவு பகலாக அரசு சிறப்பு பஸ் வசதி செய்யப்பட்டுள்ளது

அன்புடன்அழைக்கும்:




**மு.வெங்கடேசன் செட்டியார்**
பரம்பரை அறங்காவலர், அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோவில், தாயமங்கலம், இளையன்குடி வட்டம்

திருக்கோவில் போன்:04564-206614
www.thayamangalammuthumari.org




SML Graphics, Chennai 9444228203
aanmeegamalar.com

aanmeegamalar.com

बेटी बचाओ बेटी पढ़ाओ

बैंक ऑफ़ बड़ौदा
Bank of Baroda
विजया VIJAYA | देना DENA
Hamesha Aapke Liye

# தாயமங்கலம்
# அருள்மிகு
# ஸ்ரீ முத்துமாரியம்மன்
# திருக்கோவில்



# பங்குனி
# பெருந்திருவிழாவிற்கு

## வருகை தரும் அனைவரையும்

## வருக! வருக! என அன்புடன் வரவேற்கிறோம்

என்றும் மக்கள் சேவையில்

பாங்க் ஆஃப் பரோடா
बैंक ऑफ़ बड़ौदा
Bank of Baroda
विजया VIJAYA | देना DENA

**பாங்க் ஆஃப் பரோடா,**
**தாயமங்கலம் கிளை,**
1/187, தாயமங்கலம், இளையாங்குடி, சிவகங்கை - 630 709.

சித்த மருத்துவமே... துவக்கம்1965 சிறந்த மருத்துவம்...




பொன் விழா கண்ட
சித்த மருத்துவ டாக்டர் செவாலியர்

# Dr.S சோலைமலை வரதராஜன்

அவர்களின்

# சோலை மலை இந்தியன் மருந்தகம்



வாதம், சர்க்கரை சத்து, ஆஸ்துமா, சரும நோய்கள், வெட்டை வாய்வு, குடற்புண், சைனசட்டிஷ், மூக்கடைப்பு, மூக்கில் முறுமுறுப்பு, சளி உபாதைகள், காது இரைச்சல், தைராய்டு பிரச்சனைகள், நாள்பட்ட தீராத தலைவலி, குறட்டை பிரச்சனைகள், பெண்கள் மாதவிலக்கு பிரச்சனைகள், மன அழுத்தம், தூக்கமின்மை ஆண், பெண் இருபாலருக்கும் ரகசிய நோய்கள் ஸ்பெஷலிஸ்ட் பக்கவிளைவற்ற சிறப்பான சிகிச்சை அளிக்கப்படும்.

SVR சித்தமருத்துவ டாக்டர் "செவாலியர்" Dr.S சோலைமலை வரதராஜன்
அவர்களின் தயாரிப்பு மருந்துகள் கிடைக்குமிடங்கள்

**Head Office:**

## சோலைமலை இந்தியன் மருந்தகம்

7/325, நேதாஜி ரோடு, காந்திசிலை சமீபம், பரமக்குடி-623707, செல்:9750926843

ஆலோசனை நேரம்: செவ்வாய்கிழமை தவிர மற்ற நாட்களில்

**கிளைகள்**

K.K.G.பிளாசா, 69, தெற்கு மாசி வீதி,
கான்சா மேட்டுத்தெரு, மதுரை. செல் 9245293862
போன்: 0452 2344080
ஆலோசனை நேரம்: செவ்வாய்கிழமை மட்டும்
காலை 10.30 முதல் மதியம் 01.30 வரை

டோர் நிர்: 5, பூசாரித்தோப்பு தெரு, P.R.மருத்துவமனை
அருகில், இஸ்மாயில்புரம், 3வது சந்து எதிரில்
முனிச்சாலை, மதுரை-9 செல்: 7550395687
ஆலோசனை நேரம்: செவ்வாய்கிழமை மட்டும்
மாலை 5.30 முதல் இரவு 09.30 வரை

No.1/45, மீனாட்சி நகர், 4வது மேற்கு குறுக்கு தெரு
கருணாநிதி தெரு, வில்லாபுரம் மதுரை-12.
செல் 9976533353
ஆலோசனை நேரம்: புதன்கிழமை
மாலை 05.30 முதல் இரவு 09.30 வரை

ஸ்ரீ சப்தகிரி வணிக வளாகம், No.176,
வண்டிக்காரதெரு, இராமநாதபுரம் - 625 501.
போன்: 9176093353
ஆலோசனை நேரம்: புதன்கிழமை
காலை 10.30 முதல் மதியம் 01.30 வரை

பரம்பரை சித்த வைத்தியம் - அரசு பதிவு பெற்ற மருத்துவர்



"நாற்பது ஆண்டுகால அனுபவம் பெற்றவர்"
"சித்த மருத்துவ செம்மல்" செவாலியர். சோலைமலை.
Lions. Dr. S.வரதராஜன் R.S.M.P. DYN.,

aanmeegamalar.com



அன்புடன் உலக மக்கள் அனைவரும் ஆனந்தமாய் வாழ வேண்டும்

# மானாமதுரை
# ஸ்ரீ மஹா பஞ்சமுக ப்ரத்தியங்கிரா தேவி கோவிலில்

ஸ்ரீ குரோதி தமிழ்வருடப் பிறப்பு சித்திரை 1
ஏப்ரல் 14.04.2024 ஞாயிற்றுக் கிழமை அன்று

**அம்பாளுக்கு பூஜிக்கப்பட்ட கனிக்காசு பக்தர்களுக்கு வழங்கப்படும்**





## ஸ்ரீ மஹா பஞ்சமுக ப்ரத்யங்கிராதேவி வேத தர்ம ஷேத்ரா டிரஸ்ட்

பஞ்சபூதேஸ்வரம், மானாமதுரை, சிவகங்கை மாவட்டம்.

ஸ்ரீ மஹா பஞ்சமுக ப்ரத்யங்கிரா தேவி கோவிலில் 24 மணி நேரம் அன்ன தர்மம்

சேவைகள் : ஆயுர்வேத, சித்தா இலவச மருத்துவ முகாம்

தமிழகம் முழுவதும் பிரசித்தி பெற்ற கோவில்களில் அன்ன தர்மம்

ஏழை மாணவ-மாணவிகளுக்கு இலவச கல்வி, ஏழை பெண்களுக்கு திருமண உதவி

ஆடியில் 5 நாட்கள் ஆயிரம் சண்டீ மஹா ஹோமம்

அமாவாசை, பவுர்ணமி, சதுர்த்தி, அஷ்டமி, தமிழ்மாத முதல்நாள் நவ சண்டி ஹோமம்

சிதிலமடைந்த சிவாலயங்கள் திருப்பணி செய்வது
அரசமரம், வேப்ப மரங்கள் வளர்க்க ஏற்பாடு.

**ஸ்ரீ மஹா பஞ்சமுக ப்ரத்யங்கிரா தேவியின் ஸாக்த மடாலயம், மானாமதுரை.**

follow us on Panchamukha prathyangira devi trust | செல்: 9842858236